விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු




வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 | மலர் : 01 | 14.04.2021 புதன்கிழமை | இதழ் : 134 | பக்கங்கள் : 16


06 சஜித், கூட்டமைப்பு, ஜே.வி.பியே ஈஸ்டர் தாக்குதலுக்குப் பொறுப்பு!


07 ஹிட்லரை போன்று கோட்டாபய ஆட்சி


12 அமெரிக்காவில் கறுப்பினத்தவர் பொலிஸாரால் சுட்டுக் கொலை!


14 புத்தாண்டுக்கு பின்னர் புதிய கொத்தணிகள்!

# கொரோனா தடுப்பூசி அனைவருக்கும் கிடைப்பதை உறுதி செய்யவேண்டும்

## தேவையான விபரங்கள் வெளியிடப்படாத நிலையால் மக்களுக்கு பாதிப்பு என மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப்ரல் 14

இலங்கையில் கொரோனா வைரஸ் தடுப்பூசி வழங்கப்படும் திகதி இடம் மற்றும் யார் அதற்கு தகுதிபெற்றவர்கள் குறித்த விபரங்கள் சிறிதளவே வெளியாகின்றன எனத் தெரிவித்துள்ள சர்வதேச மன்னிப்புச் சபை, கொரோனா வைரஸ் தடுப்பூசிகள் அனைவருக்கும் நியாயமான முறையில் கிடைப்பதை உறுதி செய்யுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

15



**வாசகர்கள், நண்பர்கள், முகவர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்**

## சுமந்திரன் கொலை முயற்சி வழக்கு 11 பேர் நீதிமன்றத்தினால் விடுதலை

கொழும்பு, ஏப். 14

பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனைக் கொலை செய்ய சதித் திட்டம் தீட்டியமை, ஆயுத வர்த்தகம் செய்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் கைது செய்யப்பட்ட பாதாள உலகக்குழு உறுப்பினரான 'கணேமுல்ல சஞ்சீவ' அல்லது "மாலிங் கமுவே சஞ்ஜீவ" எனப்படும் சஞ்சீவ சமரரத்ன உட்பட 11 சந்தேகநபர்கள் கொழும்பு பிரதான நீதிவான்

15

## நாட்டில் அச்சமான சூழல்!

### ரிஷாத் பதியூதீன் கூறுகிறார்

கொழும்பு, ஏப். 14

இந்த நாட்டில் என்ன நடக்கும் எப்போது நடக்கும் என்று எவருக்கும் தெரியாத அச்சமான சூழலை அரசு ஏற்படுத்தியிருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியூதீன் தெரிவித்தார்.

வவுனியாவுக்கு நேற்று விஜயம் செய்த அவர்

15

## அரசாங்கத்தின் மீது சரிகிறது நம்பிக்கை!

### எச்சரிக்கின்றது சு.க.



கொழும்பு, ஏப். 14

பாரிய எதிர்பார்ப்புடன் இந்த அரசாங்கத்தை உருவாக்கினோம். ஆனால், இலஞ்சம். ஊழல் இன்று எங்கும் அதிகரித்துள்ளது.

15

## வடக்கு உள்ளிட்ட 5 மாகாணங்களில் இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, ஏப். 14

இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு உள்ள நிலையில், வடக்கு உள்ளிட்ட ஐந்து மாகாணங்களில் உள்ள மக்களுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் விசேட அறிவித்தல் விடுத்துள்ளது.

இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம்

15

## பொதுஜன பெரமுன கூட்டணியின் முரண்பாட்டுக்கு விரைவில் தீர்வு

### பிரதமர் மஹிந்த நம்பிக்கை

கொழும்பு, ஏப். 14

பொதுஜன பெரமுனவில் அங்கம் வகிக்கும் கட்சிகள் மத்தியில் உருவாகியுள்ள கருத்து முரண்பாடுகளுக்கு தீர்வைக் காணமுடியும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றார்.

15

## மில்லியன் கணக்கான மரணங்களுக்குப் பொறுப்பான ஹிட்லர் அரசியல்வாதி யாருக்கும் முன்மாதிரி அல்லர்!

### திலும் அமுனுகமவுக்கு ஜேர்மனி தூதுவர் பதிலடி

கொழும்பு, ஏப். 14

"ஜேர்மனியின் சர்வாதிகார ஆட்சியாளர் 'அடால்ப் ஹிட்லர் எந்தவொரு அரசியல்வாதிக்கும் முன்மாதிரியானவர் அல்லர்."

- இவ்வாறு இலங்கைக்கான ஜேர்மனித் தூதுவர் ஹோல்கர் செயுபேர்ட் தெரிவித்தார்.

நேற்று ருவிட்டர் செய்தியொன்றை வெளியிட்டே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அதில் மேலும் உள்ளதாவது:-

"தேவை ஏற்பட்டால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஹிட்லராக மாறுவார்" என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்திருந்தார்.

"ஹிட்லர் ஒருவர் இருந்தால் இலங்கையும் பயனடைய முடியும் என்ற விதத்திலான கருத்துக்

15

## வட மாகாணத்தில் மேலும் 20 பேருக்குக் கொரோனா!

### நல்லூரைச் சேர்ந்த ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், ஏப். 14

யாழ்ப்பாணத்தில் மேலும் 18 பேருக்கும் முல்லைத்தீவு, மன்னாரில் தலா ஒருவருக்கும் என வடக்கு மாகாணத்தில் 20 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை நேற்று செவ்வாய்க்கிழமை கண்டறியப்பட்டுள்ளது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் நல்லூர் செட்டித்தெருவில் வசிக்கும் 81 வயது பெண் ஒருவர் வீட்டில் உயிரிழந்த

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுமந்திரன்...

நீதிமன்றத்தினால் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த வழக்கு நேற்று கொழும்பு பிரதான நீதிவான் புத்திக ரீராகல முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போதே இந்த 11 பேரையும் விடுதலை செய்வதாக நீதிவான் அறிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினால் கடந்த யுத்த காலத்தில் வடக்கு, கிழக்கில் புதைக்கப்பட்டிருந்த கிளைமோர் குண்டுகள், ரி- 56 ரக துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்களை தோண்டியெடுத்து கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளுக்கு கடத்தி இரகசியமான முறையில் பாதாள உலகக்குழு உறுப்பினர்களுக்கு விற்பனை செய்தமை மற்றும் கொள்வனவு செய்தமை, பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனை கொலை செய்ய சதி செய்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் இந்த விசாரணைகள் இடம்பெற்று வந்தன.

இதுவரை முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கு அமைய, குறித்த 11 பேருக்கும் எதிராக வழக்கு தொடர்வதற்கு போதுமான சாட்சிகள் இல்லையென சட்ட மா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் ஏனைய நான்கு சந்தேகநபர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் வழக்கு தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கொழும்பு குற்ற தடுப்புப் பிரிவினர் முன்வைத்த விடயங்களை ஆராய்ந்த நீதவான் இந்த தீர்ப்பை அறிவித்தார்.

வத்தளைப் பகுதியில் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்ட முன்னாள் புலிகள் இயக்க உறுப்பினரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய சோதனைகளை முன்னெடுத்த கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் கணேமுல்ல சஞ்சீவ உள்ளிட்ட 15 பேரை கைது செய்திருந்தனர்.

கணேமுல்ல சஞ்சீவ கைது செய்யப்படும்போது வேறு ஒரு வழக்குக்காக விளக்கமறியலில் இருந்தார். அவரை சுமந்திரன் எம்.பி.யை கொலைச் செய்ய சதித் திட்டம் தீட்டிய சந்தேகத்திலும் ஆயுத கடத்தல் தொடர்பிலும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் விளக்கமறியலில் இருந்து தமது பொறுப்பில் எடுத்து, வெள்ளவத்தை பொலிஸ் நிலையச் சிறைக் கூண்டில் தடுத்து வைத்து 2019 ஆம் ஆண்டு முதல் விசாரித்திருந்தனர்.

சந்தேகநபர்கள் கடந்த இரண்டரை வருடங்களுக்கும் அதிக காலம் தடுத்து வைப்பு உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட நிலையிலேயே, இந்த விவகாரத்தில் கைது செய்யப்பட்ட 15 பேரில் 11 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

## வடமாகாணத்தில்...

நிலையில் அவருக்கு கொவிட் -19 நோய்த்தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 429 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. 20 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 11 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் 10 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்கள்.

யாழ்ப்பாணம் நல்லூர் செட்டித்தெருவில் வசிக்கும் 81 வயது பெண் ஒருவர் வீட்டில் உயிரிழந்த நிலையில் அவருக்கு கொவிட் -19 நோய்த்தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் யாழ்ப்பாணத்தில் கொவிட் -19 நோயினால் 12ஆவது நபர் உயிரிழந்துள்ளார்.

சண்டிலிப்பாய், சங்கானை மற்றும் சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் தலா ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்கள் மூவரும் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்கள்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நால்வருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் மூவர் வைத்தியசாலை சுயதனிமைப்படுத்தல் விடுதியிலும் ஒருவர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வந்தவர்.

முல்லைத்தீவு வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சிகிச்சை பெற்ற ஒருவருக்கும் மன்னார் வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

## நாட்டில்...

பல்வேறு கிராமங்களுக்கு பயணம் செய்து மக்களை சந்தித்தார்.

இதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எப்படியாவது என்னை சிறையிலே அடைக்க வேண்டும் என்று எத்தனையோ பொய்க் குற்றச்சாட்டுக்கள், முறைப்பாடுகளைச் செய்தும் பலன் கிடைக்காத போது, மன்னாருக்கு வாக்காளர்களை பஸ்ஸில் அழைத்துச்சென்ற விடயத்தை முன்னிறுத்தி என்னைச் சிறையிலேயே அடைத்தார்கள்.

அதன்பிறகும் தொடர்ச்சியான சதிகளை இந்த அரசு செய்து கொண்டேயிருக்கின்றது. குறிப்பாக கொரோனா தொற்று நோயினால் இறப்பவர்களின் சடலங்களை பலவந்தமாக எரிக்கும் சதியை இந்த அரசாங்கம் செய்தது. எமது கருத்துக்களையும், மக்களின் வேதனைகளையும் அவர்கள் பொருட்படுத்தவில்லை.

ஜெனிவாவால் அந்த விடயம் இடைநிறுத்தப்பட்டது.

அதன்பிறகு சிறுபான்மைச் சமூகம் சார்ந்து பேசுபவர்களின் குரல்களை நசுக்கும் சதி நடந்து கொண்டிருக்கின்றது. கடந்த மாதம் அசாத் சாலியை கைது செய்தார்கள். அதேபோல அரசாங்கத்தின் பிழையான நடவடிக்கைகளை எதிர்த்து பேசுகின்ற அசேல சம்பத் என்ற சிவில் அமைப்பை சேர்ந்தவரை கைது செய்திருப்பதாக அறிகிறேன்.

இந்த நாட்டில் என்ன நடக்கும் எப்போது நடக்கும் யாருக்கு நடக்கும்? என்ன செய்வார்கள் என்பது தெரியாது. அனைவரும் ஒரு பயந்த சுபாவத்தோடு வாழவேண்டும் என்று இந்த அரசு அச்சத்திலே வைத்திருக்கின்றது. கொழும்பை விட்டு செல்லமுடியாத அளவுக்கு பல வகையான தொல்லைகள் எங்களுக்கு வழங்கப்பட்டன.

அந்தவகையில் நான் சிறையில் இருந்தபோது எனக்காக மன்றாடிய அனைத்து மக்களுக்கும் நான் நன்றியுள்ளவனாக கடமைப்பட்டுள்ளேன்- என்றார்.

## வடக்கு...

விடுத்துள்ள விசேட அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சப்ரகமுவ, மத்திய, மேல், வடக்கு மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்வதற்கான சாத்தியம் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும்.

மின்னல் தாக்கங்களினால் ஏற்படக் கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

சப்ரகமுவ, மத்திய, மேல் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மி.மீ அளவான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.



# பேலியகொடை சந்தைக்கு அமைச்சர் டக்ளஸ் விஜயம்

கொழும்பு, ஏப்.14

பேலியகொடை மீன் சந்தையின் கழிவகற்றல் கட்டமைப்பு சீர்செய்து சுகாதார நிலையை மேம்படுத்துவது தொடர்பாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பேலியகொடை மத்திய மொத்த மீன் விற்பனை நிலையத்துக்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர், மீன் சந்தை வளாகத்தை பார்வையிட்டார்.

இதன்போது, வடிகான் கட்டமைப்புக்கள் செம்மையாக பராமரிக்கப்படாமல் இருப்பதை அவதானித்த அமைச்சர், அதற்கான காரணத்தை வினவியதுடன் அதனை உடனடியாக திருத்துவதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் பணிப்புரை வழங்கினார்.

மேலும், மீன்களை வெட்டுவதற்கான பிரிவொன்று ஏற்படுத்தப்படுவது உட்பட பல்வேறு கோரிக்கைகள் இதன் போது அதிகாரிகளால் அமைச்சரிடம் முன்வைக்கப்பட்டன.

அதிகாரிகளின் கருத்துக்களை செவிமடுத்த அமைச்சர் டக்ளஸ், குறித்த விடயங்கள் தொடர்பில், உரிய தரப்புக்களுடன் கலந்துரையாடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார். (எ)

## கொரோனா...

பலவீனமான நிலையில் உள்ள மக்கள் தடுப்பூசி வழங்கப்படுவதிலிருந்து விலக்கி வைக்கப்படும் நிலை உருவாவதற்கு தென்னாசிய அரசாங்கங்கள் அனுமதிக்க கூடாது எனவும் சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸ் தடுப்பூசி வழங்கப்படும் திகதி இடம் மற்றும் யார் அதற்கு தகுதிபெற்றவர்கள் குறித்த விபரங்கள் சிறிதளவே வெளியாகின்றன என தெரிவித்துள்ள சர்வதேச மன்னிப்புச்சபையின் ஆசிய - பசுபிக்கிற்கான இயக்குநர் யாமினி மிஸ்ரா, இது தடுப்பூசியை பெற முயலும் மக்களிற்கு தடையாகவுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கை பாக்கிஸ்தான் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் கொரோனா வைரஸ் தடுப்பூசி வழங்கும் திட்டங்கள் குறித்த எந்த தகவலும் இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

பிராந்தியத்தில் தடுப்பூசிக்கான பெரும் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக தேசிய அளவில் தடுப்பூசியை உற்பத்தி செய்வதற்கு சர்வதேச சமூகம் உதவவேண்டும் எனவும் சர்வதேச மன்னிப்புச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

## பொதுஜன...

மேதின நிகழ்வுகள் மற்றும் மாகாண சபை தேர்தல்கள் தொடர்பில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் மத்தியில் காணப்படும் கருத்துவேறுபாடுகளிற்கு தீர்வை காணலாம் என நம்பிக்கை கொண்டுள்ளதாக பிரதமர் தெரிவித்திருக்கின்றார்.

ஏப்ரல் 19ஆம் திகதி அலரிமாளிகையில் இடம்பெறவுள்ள விசேட கூட்டத்திற்கு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் கூட்டணியில் இடம்பெறுள்ளவர்கள் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னைகள் தொடர்பில் தங்கள் சொந்தக்கருத்துக்களை கொண்டிருப்பது வழமை என தெரிவித்துள்ள பிரதமர், வேறுபட்ட அரசியல் கொள்கைகள் கருத்துக்களால் இந்த நிலை காணப்படும் என தெரிவித்துள்ளார்.

உலகம் முழுவதிலும் காணப்படும் அரசியல்கூட்டணிகளை கருத்தில்கொள்ளும்போது இது புதிய விடயமல்ல என தெரிவித்துள்ள அவர், இது எங்கள் கூட்டணியில் உள்கட்சி ஜனநாயகம் காணப்படுவதை வெளிப்படுத்துகின்றது எனவும் தெரிவித்துள்ளார். இதன் காரணமாக கூட்டணி கட்சிகள் பல விவகாரங்கள் தொடர்பில் தங்கள் சொந்தக்கருத்துக்களை முன்வைக்கலாம் என தெரிவித்துள்ள பிரதமர் கூட்டணியின் ஐக்கியத்திற்கு ஆபத்து என்பது இதன் அர்த்தமல்ல எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## மில்லியன்...

கள் எனக்குக் கேட்கின்றது.

கற்பனைகளுக்கு அப்பால் மில்லியன் கணக்கான மரணங்களுக்கும் மக்களின் துன்பங்களுக்கும் பொறுப்பானவரே, அடால்ப் ஹிட்லர் என்பதை நான் நினைவுகூர்கின்றேன்.

நிச்சயமாக அவர் எந்தவொரு அரசியல்வாதிக்கும் முன்மாதிரியானவர் அல்லர் - என்றுள்ளது.

## அரசாங்கத்தின்...

அரசாங்கத்தின் மீது நாட்டு மக்கள் வைத்திருந்த நம்பிக்கை நாளுக்கு நாள் சரிவடைந்து வருவதாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சிரேஸ்ட உப தவிசாளர் பேராசிரியர் ரோஹன லக்ஷ்மன் பியதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டுக்கு இன்று முன்னுதாரணமான தலைவர் தேவை. அரசாங்கத்தின் மீது நாட்டு மக்கள் வைத்திருந்த நம்பிக்கை நாளுக்கு நாள் சரிவடைந்து வருகிறது.

எங்கு பார்த்தாலும் ஊழல் மோசடி குறித்த குற்றச்சாட்டுக்கள் அரசாங்கத்தின் மீது சுமத்தப்பட்டு வருகிறது. பாரிய எதிர்பார்ப்புடன் அரசாங்கத்தை உருவாக்கினோம். ஆனால், இலஞ்சம், ஊழல் இன்று எங்கும் அதிகரித்துள்ளது.

தேங்காய் எண்ணெய் மோசடி, சீனி மோசடி, பி.சி.ஆர். மோசடி என வரிசை நீண்டு செல்கிறது. இதனால் மக்களின் நம்பிக்கை சரிந்து கொண்டு செல்கிறது. இதனை மீளக் கட்டியெழுப்ப வேண்டும்.

ஊடகவியலாளர்கள் மீது அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது. மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சிக் காலத்தில் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்படவில்லை என்பது மகிழ்ச்சி. எவரையும் தாக்கவில்லை, கொல்லவில்லை-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியும் நடந்தது!

வவுனியாவில் ஒரு தோட்டத்தின் அருகேயுள்ள மரத்தில் நிறைய குரங்குகள் இருந்தன. பல வருடங்கள் அங்கேயே இருந்ததால் தோட்டக்காரருக்கும் நண்பர்களாகியிருந்தன. தோட்டக்காரர் செய்யும் காரியங்களைப் பார்த்துப் பார்த்து குரங்குகளும் அவற்றைச் செய்து விளையாடுவது வழமையாகிவிட்டது.

ஒருமுறை தோட்டக்காரர் பக்கத்து ஊருக்குப் போக வேண்டியிருந்தது. அப்போ தோட்டக்காரருக்கு ஒரு யோசனை தோன்றியது. தான் பக்கத்து ஊருக்குப் போகும் நேரத்தில் குரங்குகளை தோட்டத்துக்கு தண்ணீர் ஊற்றச் சொல்லலாமே என்று நினைத்தார். குரங்குகளை அழைத்து விஷயத்தைச் சொன்னார். குரங்குகளுக்கும் சந்தோஷம். ஆனால், அவற்றுக்கு ஒரு பிரச்னை. எந்தச் செடிக்கு எவ்வளவு தண்ணீர் ஊற்றுவது என்று தெரியவில்லை.

"அது ஒண்ணும் பெரிய பிரச்னையில்லை. வேர் பெருசா இருந்தா நிறைய தண்ணீர் ஊத்துங்க. சின்ன வேரா இருந்துச்சுனா கொஞ்சமா, ஊத்துங்க", என்று யோசனை சொன்னார் தோட்டக்காரர்.

பக்கத்து ஊருக்குப் போய்விட்டு திரும்பி வந்து தோட்டத்தைப் பார்த்த தோட்டக்காரருக்கு அதிர்ச்சி. அத்தனை செடிகளும் பிடுங்கப்பட்டு காய்ந்து கிடந்தன. 'என்னாச்சு?' என்று கேட்டார் தோட்டக்காரர்.

'வேர் பெருசா இருக்கா, சின்னதா இருக்கானு பார்க்கிறதுக்காக, செடியெல்லாம் பிடுங்கினோம்' என்றன குரங்குகள்.

தகுதியில்லாதவர்களிடம் பொறுப்பை கொடுத்துவிட்டு அதற்காக வேதனைப்படுவது கொடுப்பவர் தவறே தவிர, பொறுப்பை எடுப்பவரது தவறுஅல்ல.

யாழ்ப்பாண மேயர் கைதான விடயமும் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டமை பற்றியும் பலரும் தத்தமக்கு தெரிந்த வகையில் அல்லது வேண்டப்பட்ட வகையில் விமர்சனம் செய்து வருகின்றனர். ஆனால், இந்தச் சம்பவம் பற்றி ரெலோ கட்சியின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜனா என்ற கோவிந்தன் கருணாகரம் அவர்கள் மிகப் புத்திக்கூர்மையான கேள்வி ஒன்றைக் கேட்டிருக்கின்றார்.

மணிவண்ணன் கைது செய்யப்பட்டு வவுனியாவில் வைக்கப்பட்டிருந்தபோதே அமைச்சர் டக்ளஸ், அவர் பிணையில் விடுவிக்கப்படுவார் என்று அறிவித்த சில மணி நேரங்களில் அவர் யாழ்ப்பாண நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

டக்ளஸின் சிபாரிசின் பேரிலேயே மணிவண்ணன் விடுதலை செய்யப்பட்டாரென அவருக்கு நெருக்கமானவர்கள் கருத்துச் சொல்ல, வழக்கில் முன்னிலையான சுமந்திரனின் வாதத் திறமையாலேயே விடுவிக்கப்பட்டார் என்று சுமந்திரனின் ஆதரவாளர்கள் கருத்துச் சொல்ல நமது அரசியல் களம் படாதபாடு பட்டுக்கொண்டிருக்கின்றது.

ஆனால், மணிவண்ணனை விடுவிப்பதற்கு சிபாரிசு செய்து மணிவண்ணனை விடுதலை செய்ய டக்ளஸ் தேவானந்தாவால் முடியும் என்றால், தமிழ் அரசியல் கைதிகளை ஏன் அவரால் விடுவிக்க முடியாது என்று கேள்வி எழுப்பியிருக்கிறார் நமது ஜனா என்ற கருணாகரம்.

ஒருவரை கைது செய்து பொலிஸ் நிலையத்தில் வைத்திருக்கும்போது, அவரை விடுதலை செய்ய உதவுவதற்கும் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்ற கட்டளையின் கீழ் சிறையில் இருப்பவரை விடுதலை செய்வதையும் ஒப்பிட்டு பேசியிருக்கிறார் நமது ஜனா.

பாராளுமன்றம் என்பது உயரிய சபை. சொல்லப்போனால் நாட்டிலுள்ள சட்டங்களையே உருவாக்குகின்ற சபை. அத்தகைய சபையில் உறுப்பினராக இருக்கின்ற ஒருவர் ஜனா. அவர் இதுபோன்ற அறிவிப்புக்களை செய்கின்ற போது ஒன்றுக்கு பல தடவை அதுகுறித்து யோசிக்க வேண்டாமா? எப்படியான தகவல்களைச் சொன்னால் ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுக்கும் என்பதைத் தெரிந்து கொண்டு சொல்வதல்ல தலைவர்களின் பணி.

சுமந்திரன் தனது வாதத்திறமையால் மணிவண்ணனை விடுதலை செய்தார் என சொல்கிறார்களே, அப்படியெனில் அதே திறமையைப் பயன்படுத்தி இந்த அரசியல் கைதிகளை விடுவிக்க முடியாதா என்று ஜனாவின் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்ட ஊடகவியலாளர்கள் எவரும் கேள்வி கேட்காததால் ஜனா தப்பித்தார்.

அப்படியொரு கேள்வியைக் கேட்டிருந்தால், அவரது கட்சிக்காரரையே அவரால் காப்பாற்ற முடியாமல் போயிருக்கும்!

**ஊர்க்குருவி**

# விடிவுக்காக புத்தாண்டு தினத்தில் தெய்வங்களிடம் பிரார்த்தியுங்கள்

## ஆறு. திருமுருகன் வாழ்த்து



யாழ்ப்பாணம், ஏப். 13

புத்தாண்டு பிறக்கிறது எம்மண்ணில் அமைதியில்லை நிம்மதியான சூழல் இல்லை நாம் வணங்கும் தெய்வங்களிடம் விடிவு கேட்டு அனைவரும் பிரார்த்தனை செய்யுங்கள் என்று சிவபூமி அறக்கட்டளை தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் தனது புத்தாண்டு வாழ்த்தில் தெரிவித்துள்ளார்.

அவரது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு

'சைவத்தமிழர்களின் வாழ்வில் சித்திரைப் புத்தாண்டு மிகவும் முக்கியத்துவம் நிறைந்த நாள். ஒவ்வொரு மனிதனும் தம் வாழ்வின் பெறுமதியை உணர்ந்து கடவுளுக்கு நன்றி சொல்லி, தன் பணிகளைப் புனிதமாகத் தொடரும்நாள் புதுவருடம் பிறக்கும் வேளை சகல மக்களும் திருக் கோவில்களுக்குச் சென்று நன்கு வழிபாடு செய்யுங்கள். புதிய எண்ணங்களோடு புத்தாண்டை வரவேற்றுக்கொள்ளுங்கள்.

"தாய், தந்தை, மூத்தோர் பாதம் பணிந்து அவர்களின் ஆசியோடு அன்பாக வாழ்வதற்கு வழிதேடுங்கள். உறவினர்களின் இல்லங்களுக்கு சென்று அன்பை வளர்த்துக் கொள்ளுங்கள். இன்றைய சூழலில் நேரில் செல்ல முடியாதவிடத்து தொலைபேசி வாயிலாக அல்லது வாழ்த்து கடிதங்கள் மூலமாக இனிய உறவைப்பேணுங்கள்.

"புத்தாண்டு பிறக்கிறது எம்மண்ணில் அமைதியில்லை நிம்மதியான சூழல் இல்லை நாம் வணங்கும் தெய்வங்களிடம் விடிவு கேட்டு அனைவரும் பிராத்தனை செய்யுங்கள். எங்கள் பிள்ளைகளின் எதிர்கால வாழ்வு சிறக்க பிரார்த்தியுங்கள். கோபங்களை வளர்த்துப் பயனில்லை. அன்பை பெருக்கி அனைவரும் ஆனந்தமாக வாழ வழிதேடுங்கள். அறம் என்றும் வெல்லும் என்ற சத்திய வாக்குக்கு மதிப்பு கொடுத்து அனைவரும் தர்மவழியை பின்பற்றுங்கள். எல்லாம் வல்ல சிவ பரம்பொருள் அனைவருக்கும் ஆனந்தமான வாழ்வு தர வாழ்த்தி நல்லாசி கூறுகிறேன்." (ஐ)

# மருதடி பிள்ளையார் தேர் திருவிழா இன்று!

நவாலி, ஏப். 14

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மானிப்பாய் மருதடி பிள்ளையார் ஆலயத் தேர்த் திருவிழா இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இது குறித்து ஆலயத்தின் திருவிழா கால பிரதம குரு சிவஸ்ரீ நாகேந்திர திவாகர குருக்கள் கூறுகையில்,

இன்று காலை 7.30 மணிக்கு விசேட அபிஷேகத்தைத் தொடர்ந்து காலை 8.30 மணிக்கு பூசை வழிபாடும், காலை 9 மணிக்கு ஸ்தம்ப பூசையும் இடம்பெறும்.

பின்னர், முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று, நண்பகல் 12 மணிக்கு தேர்த் திருவிழா இடம்பெறும். தொடர்ந்து பிற்பகல் 3 மணிக்கு பச்சை சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும், மாலை 5 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறும் - என்றார். (ஐ-5)

# வட்டு. இந்து வாலிபர் சங்க மூத்த உறுப்பினர் கொரோனாவுக்கு பலி

கொழும்பு, ஏப் 14

வட்டு. இந்து வாலிபர் சங்கத்தின் ஆரம்ப கால உறுப்பினர் அப்புத்துரை வேலுப்பிள்ளை நேற்று கொழும்பில் தனது 109வது வயதில் கொரோனா வைரஸ் பாதிப்புக்குள்ளாகி காலமானார். வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகக் கொண்ட இவர் நீண்டகாலமாக கொழும்பில் வசித்து வந்தவர்.

இந்து வாலிபர் சங்கம் வட்டுக்கோட்டை, மற்றும் இந்து வாலிபர் சங்கம் கொழும்பு கிளை ஆகியவற்றின் வளர்ச்சிக்கு தொடர்ச்சியான பங்களிப்பை வழங்கி வரும் இவர், வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரிக்கு அருகாமையில் உள்ள தனது காணியினை வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்திற்கு நன்கொடையாக வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

# தொற்று சிகிச்சை நிலையத்துக்கு யாழ்.வணிகர் கழகம் உதவி

யாழ்ப்பாணம், ஏப். 14

கோப்பாய் கொரோனா சிகிச்சை நிலையத்திற்கு யாழ் வணிகர் கழகத்தினால் உதவிப் பொருட்கள் கையளிக்கப்பட்டன.

யாழ்.போதனா வைத்திய சாலை பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் பவானந்தராஜாவிடம் யாழ்.வணிகர் கழகத் தலைவர் இந்த உதவிப் பொருட்களை கையளித்தார்.

கொரோனா சிகிச்சை நிலையத்திற்கு உதவிப் பொருட்களை கையளிக்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் உள்ள வணிகர் கழக அலுவலகத்தில் நேற்று மாலை இடம்பெற்றது.

இதன் போது பிரதி பணிப்பாளர் தலைமையிலான வைத்தியசாலை நிர்வாகத்தினரும் வணிகர் கழகத் தலைவர் தலைமையிலான வர்த்தக சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (அ)

# பேரினவாத ஆக்கிரமிப்பிலிருந்து தமிழினம் விடுபடும் ஆண்டாகட்டும்

## ஐங்கரநேசன் வாழ்த்து

யாழ்ப்பாணம், ஏப். 14

பெருங்கொரோனாத் தொற்றிலிருந்தும் பேரினவாத ஆக்கிரமிப்பிலிருந்தும் தமிழினம் விடுபடும் ஆண்டாகப் பிலவ வருடம் அமையட்டும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்திருக்கிறார்.

தமிழ்ப் புத்தாண்டு தொடர்பில் அவர் விடுத்திருக்கும் வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும், "மனிதன் இப்பூமி தனக்குரியது மாத்திரமே என்ற மனித மையவாதச் சிந்தனையின் வயப்பட்டு இயற்கையின் பல்வகைமைத் தன்மையை நிராகரித்து வருகிறான். மனிதன் உயிரினங்களை அழித்தும், இயற்கை வளங்களைச் சூறையாடியும் பூமித்தாயில் ஓர் ஒட்டுண்ணியாக வாழ்வதன் விளைவாக இயற்கை தன்னைப் பேரழிவிலிருந்து காப்பாற்றி ஏனைய உயிர்களுக்கு வாழ்வளிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதற்கான எச்சரிக்கையே கொரோனா வைரஸின் பிரசவம்.

இலங்கைத் தீவில் சிங்கள, பௌத்த பேரினவாதம் பல்லினத்துவத்தை, பன்மதத்தை நிராகரித்து இலங்கையைத் தனித்த ஒரு பௌத்த, சிங்கள நாடாகக் கட்டமைத்து வருகின்றது. சிறுபான்மை இனங்களின் வாழ்விட, சமூக, மத, அரசியல் உரிமைகளை நிராகரித்துப் பேரினவாதம் கோலோச்சி வருகின்றது. இவற்றின் முற்றுகையினுள்ளேயே தமிழ் மக்களுக்குப் பிலவ வருடம் பிறந்திருக்கிறது.

கொரோனாப் பெருங்கொள்ளை நோயிலிருந்து விடுபடவும், பேரினவாதத்தின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுபடவும், இப்புத்தாண்டு நாளில் இயற்கை என்ற பேரிறைவனைப் பிரார்த்திப்போமாக - என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

கல்வி tv
CHANNEL-1

**காலை**

| | |
|---|---|
| 5.15 மணி | - தரம் 06 தமிழ் |
| 6.00 மணி | - தரம் 07 விஞ்ஞானம் |
| 6.45 மணி | - தரம் 08 கணிதம் |
| 7.30 மணி | - தரம் 09 வரலாறு |
| 8.15 மணி | - தரம் 10 விஞ்ஞானம் |
| 9.00 மணி | - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) தமிழ் |
| 10.00 மணி | - பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல் |
| 11.00 மணி | - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) கணிதம் |
| 12.00 மணி | - தரம் 06 தமிழ் |

**பகல்**

| | |
|---|---|
| 1.00 மணி | - தரம் 07 விஞ்ஞானம் |
| 2.00 மணி | - தரம் 08 கணிதம் |
| 3.00 மணி | - க.பொ.த சாதாரண தரம் விவசாயம் |
| 3.40 மணி | - க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம் |
| 4.20 மணி | - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம் |
| 5.00 மணி | - க.பொ.த சாதாரண தரம் கணிதம் |
| 5.40 மணி | - க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம் |
| 6.20 மணி | - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள் |
| 7.00 மணி | - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
14.04.2021 புதன்கிழமை
சார்வரி, சித்திரை 01

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# அமெரிக்காவின் எச்சரிக்கை!

கடந்த ஆண்டு கொழும்பிற்கு விஜயம் செய்திருந்த அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோ, சீனாவின் செயல்பாடுகள் தொடர்பில் இலங்கையை எச்சரித்திருந்தார். அதாவது, இலங்கையின் இறைமையை பலவீனப்படுத்தும் வகையில், இலங்கையின் கடல் மற்றும் நிலத்தில் சீனா அத்துமீறி செயல்பட்டுவருவதாகவும், பொருளாதார விடயங்களில்சீனா ஒரு வேட்டைக்காரன்போன்று செயற்பட்டுவருவதாகவும் எச்சரித திருந்தார். ஆனால், அவ்வாறானதோர் எச்சரிக்கைக்கு பின்னரும்கூட, ஆளும் பொதுஜன பெரமுன அரசாங்கம் சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து, ஆளுகை பரிமாற்றம் என்னுமடிப்படையில் கருத்தரங்கொன்றை மேற்கொண்டிருந்தது. சீனாவின் ஆட்சி முறை, உலக ஒழுங்கிற்கு முற்றிலும் முரணானது.

சீனாவின் பிடிக்குள் இலங்கை மெதுமெதுவாக வீழ்ந்து கொண்டிருந்தவொரு சூழலில்தான், 2015இல் ஆட்சி மாற்றமொன்று ஏற்பட்டிருந்தது. ஆட்சி மாற்றம் சீனாவை ஓர் எல்லைக்குள் முடக்கிவிடும் என்னும் கணிப்பும் பலரிடம் இருந்தது. இராஜதந்திர வட்டாரத்திலும் அவ்வாறானதொரு நம்பிக்கையே மேலோங்கியிருந்தது. ஆனால், எதிர்பார்த்ததுபோன்று விடயங்கள் நடைபெறவில்லை. மாறாக, மேற்கின் நண்பரான ரணில் விக்கிரமசிங்க, அதிர்சியளிக்கத்தக்க வகையில், அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 வருட குத்ததைக்கு சீனாவிற்கு வழங்கினார். அதேவேளை, கொழும்பு துறைமுக நகரத் திட்டமும் தடையின்றி முன்னெடுக்கப்பட்டது. சீனாவை ஒரு வரையறைக்குள் முடக்கும் எதிர்பார்ப்பை பூர்த்திசெய்வதில், ஆட்சி மாற்றம் மோசமான தோல்வியையே பதிவு செய்திருக்கின்றது.

மீளவும் ராஜபக்ஷக்கள், கோட்டபாய ராஜபக்ஷ தலைமையில் ஆட்சியை கைப்பற்றிய நிலையில், இந்தியாவிற்கு தனது முதலாவது விஜயத்தை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ, அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கான 99 வருட குத்தகை ஒப்பந்தத்தை, மறுபரிசீலனை செய்யப்போவதாக அறிவித்திருந்தார். ஆனாலும், அது நடைமுறையில் நிரூபிக்கப்படவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலைனா டெப்ளிஸ், சீனாவினால் நிர்மாணிக்கப்படும் கொழும்பு துறைமுக நகரம், கறுப்பு பணத்தை வெள்ளையாக்கும் ‘பணச் சலவை’ மையமாக மாறக்கூடிய ஆபத்திருப்பதாக எச்சரித்திருக்கின்றார். துறைமுக நகர விடயத்தில் அரசாங்கம் கடைப்பிடிக்கும் நெகிழ்வுத் தன்மை, சட்டவிரோத மற்றும் மோசடிகளில் ஈடுபடுபவர்களுக்கான கூடாரமாக மாறிப் போவதற்கான ஆபத்துள்ளது. எனவே, இதனை தடுக்கும் வகையில் சட்ட ஏற்பாடுகள் அவசியம் எனவும் அமெரிக்க தூதுவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

கொழும்பு துறைமுக நகரத்திட்டத்தை முன்னெடுக்கும் சீன அரச நிறுவனம், ஏற்கனவே அமெரிக்காவினால் தடைசெய்யப்பட்டுள்ள நிறுவனம் என்பதையும் இங்கு கவனிக்கவேண்டும். பல்வேறு சீன நிறுவனங்கள் அமெரிக்காவினால் தடைசெய்யப்பட்டுள்ள நிலையிலும், ஏற்கனவே கொரோனாவிற்கு பின்னரான உலக ஒழுங்கில், சீன எதிர்ப்பரசியல் ஐரோப்பிய மையப்பட்டுவரும் நிலையிலும், மேற்குலக முதலீட்டாளர்கள் கொழும்பு துறைமுக நகரத்தில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவாகவே இருக்கின்றன.

இந்த நிலையில் சீனாவின் முதலீட்டாளர்களும், சீனாவிற்கு நெருக்கமான நாடுகளின் முதலீட்டாளர்களுமே துறைமுக நகரத்திற்குள் முகாமிடப் போகின்றனர். இது மிகவும் சிக்கலானதொரு நிலைமையை தோற்றுவிக்கலாம். அமெரிக்க தூதுவர் கூறுவதுபோன்று, இலங்கை இறுக்கமான சட்ட ஏற்பாடுகளை கொண்டிருக்காவிட்டால், உலக ஒழுங்கிற்கு நெருக்கடியான சக்திகளின் மையமாகவும் துறைமுக நகரம் மாறிவிடக்கூடிய ஆபத்துண்டு. அதேவேளை, அண்மையில் லக்ஷ்மன் கிரியல்ல கூறியதுபோன்று, துறைமுக நகரம் இலங்கைகுள் பிறிதொரு நாடுபோன்று செயல்பட்டாலும் ஆச்சிரியப்பட ஏதுமில்லை.

# சரத் வீரசேகரவின் பார்வையில் சமஷ்டி ஆட்சிமுறை!

- அலசுவது இராஜதந்திரி -

அரசியலில் ஏதோ பாண்டித்தியம் பெற்றவர்போல பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர எவ்வகையிலும் சமஷ்டி முறையிலான ஆட்சி வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ஏற்படுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது என்று தெரிவித்துள்ளார்.

இராணுவ பின்னணியைக்கொண்டுள்ள அட்மிரல் சரத் வீரசேகர, தமக்கே உரித்தான தொனியில், “எவ்வகையிலும் சமஷ்டி முறையைக்கொண்ட ஆட்சிமுறை வடக்கு-கிழக்கில் ஏற்படுத்த அனுமதிக்கப்படமாட்டாது” என்று தெரிவித்துள்ளார். ஆனால், இலங்கையில் சமஷ்டி முறையிலான அரசியல் ஏற்பாட்டு முறைமூலமே தமிழ் பேசும் வடக்கு - கிழக்கு மக்களின் அரசியல் பிரச்னைகளுக்கு தீரவைக்காண முடியும் என்று சிங்கள தலைவர்கள் இலங்கை சுதந்திரமடைய முன்னரே தெரிவித்திருந்தனர்.

ஆனால், எதனையும் ஆரம்பத்தில் வேண்டாமென்று நிராகரித்துவிட்டு, பின்னர் நிராகரித்ததையே மீளவும் பெறுவதற்காக ஏங்குவதும், போராட்டங்களை நடத்துவதுமே இலங்கைத் தமிழர் அரசியல் தரப்பின் போக்காக இருந்து வருகின்றது. 1926ஆம் ஆண்டில் பிரிட்டிஷாரது ஆட்சி நிலவிய காலத்திலேயே சமஷ்டி முறையிலான ஆட்சி முறையே வடக்கு - கிழக்கு மக்களுக்கு வழஙகப்பட வேண்டுமென சிங்கள அரசியலாளர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

**யாழ்ப்பாணத்தில் பண்டாரநாயக்க**

இதுகுறித்து முன்னாள் பிரதமர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்க 1926ஆம் ஆண்டில் குறிப்பிட்டதோடு, யாழ்ப்பாணத்துக்கும் வந்து அதுபற்றி உரை நிகழ்த்தியிருந்தார். அன்று தமிழ் மக்கள் சகல துறைகளிலும் சிறந்து விளங்கியிருந்ததோடு, பல முக்கிய பதவிகளிலும் இருந்து வந்நதனர். இதன் காரணமாக, அவர்களது அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு அம் மக்கள் செறிந்து வாழ்கின்ற வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு சமஷ்டி முறையிலான ஆட்சியமைப்யே உகந்த அரசியல் நிர்வாகமாக இருக்கமுடியும் என்று பண்டாரநாயக்க குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், அன்று நாட்டில் ஒரு பிரிவினைக்கான தேவை குறித்து நினைத்துப் பார்த்திராத அன்றைய தமிழ் தலைவர்கள், சமஷ்டி முறைமையை நிராகரித்திருந்திருந்தனர். வடக்கு - கிழக்கிற்கு ஏதோ ஒரு வடிவில் சமஷ்டி முறையிலான தீர்வே சாத்தியப்படும் என்பதை எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்க தெளிவுற தெரிவித்திருந்தார். அத்துடன், அன்றிருந்த தமிழ் புத்திஜீவிகள் சமஷ்டி முறையை ஏற்கவில்லை என்பதையும் பண்டாரநாயக்க தெரிவித்திருந்திருந்தார்.

**பரந்த பார்வை**

இதற்கு முக்கியமான காரணமென்னவெனில், ஆங்கிலேயர் இலங்கையில் அறிமுகப்படுத்திய சகல முக்கிய துறைகளிலும் தமிழர்களே செல்வாக்குச் செலுத்தியதோடு, இலங்கையர்கள் என்ற ஒரு பரந்த பார்வையோடு அவர்கள் காணப்பட்டனர். இதற்கு நல்ல உதாரணமாக சேர் பொன்னம்பலம் இராமநாதன் மற்றும் அவரது காலத்தில் வாழ்ந்த தமிழ் அரசியலாளர்களின் உயர்வான மற்றும் ஆங்கிலேய கனவான்களுக்கு நிகரான வாழ்க்கை முறை நல்ல உதாரணமாக விளங்கியிருந்தமை.

ஆனால், இலங்கை சுதந்திரமடைந்த பின்னரே படிப்படியாக ஆரம்பித்த இன ரீதியான முறுகல், தமிழ் பேசும் மக்களையும் சிங்கள மக்களையும் இருவேறு துருவங்களாக பிரித்து விட்டிருந்தது. அத்துடன், பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகரபோன்ற ‘அரை வேக்காடு’ அரசியல்வாதிகளையும் சமஷ்டி ஆட்சி முறைபற்றி பேசவைத்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

சுதந்திர இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்கான அரசியல் போராட்டம் நாளடைவில் ஆயுதப் போராட்டமாக விரிவடைந்தபோது 1987ஆம் ஆண்டு இணைந்த வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு மாகாண சபை ஆட்சிமுறை இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்தின் அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்டது. அப்போது அதனைக் கூட நிராகரித்ததுடன், மாகாண சபை முறைமையை அமுலாக்க முன்வந்த இந்திய இராணுவத்தினரை விரட்டியடித்த ‘பெருமையும்’ பலம் பொருந்திய தமிழ் ஆயுதப் போராட்ட அமைப்பாக விளங்கிய தமிழீழ விடுதலைப் புலிகளைச் சாரும்.

எனவே, தற்போது தமிழ் மக்கள் தேசிய கூட்டணி தலைவர் சி. வி. விக்னேஸ்வரன் புதிய அரசியலமைப்பு தயாரிக்கப்படும் போது வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு சமஷ்டி முறையே அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென குறிப்பிட்டமைக்கு பதிலளித்தபோதே அமைச்சர் சரத் வீரசேகர சமஷ்டி முறைமைக்கு இடமளிக்கப்போவதில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

எது எப்படி இருந்தபோதிலும், சமஷ்டி அடிப்படையிலான ஆட்சி முறையே வடக்கு-கிழக்கு மக்களுக்கு உகந்ததென்பது கற்றறிந்த அன்றைய தென்னிலங்கை அரசியலாளர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிலையில், சரத் வீரசேகர சமஷ்டி முறையை நிராகரித்திருப்பது அவரது முதிர்ச்சியற்ற அரசியலறிவை வெளிக்காட்டுவதோடு, வடக்கு - கிழக்கு மக்களின் அரசியல் அபிலாஷைகள் புறக்கணிக்கப்படும் சூழ்நிலைகள் தொடர்ந்து கொண்டிருப்பதையுமே வெளிப்படுத்துகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல் - 14 புதன்கிழமை
பிலவ வருடம் – சித்திரை – I சித்திரைப் புத்தாண்டு
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 1.30
திதி : திரிதியை




**மேடம்**
பிள்ளைகள் உங்கள் விருப்பப்படி நடந்து கொள்வர். மகிழ்ச்சி கூடும். பல காலம் தடைப்பட்ட விஷயங்கள் நல்ல விதத்தில் முடியும். பிள்ளைகளின் திருமணத்தை ஏற்பாடு செய்து முடிப்பீர்கள்.

**இடபம்**
மகனுக்கு அதிக சம்பளத்துடன் புதிய வேலை கிடைக்கும். பிள்ளைகளுக்கு நல்ல வாழ்க்கைத் துணை ஏற்பாடாகும். வாகனத்தை சீர் செய்வீர்கள். புதிய பொருள் வாங்குவீர்கள்.

**மிதுனம்**
பழைய பிரச்னை ஒன்றை புதிய அணுகுமுறையால் தீர்ப்பீர்கள். தோல்வி மனப்பான்மையிலிருந்து விடுபடுவீர்கள். தைரியம் கூடும். பணவரவு அதிகரிக்கும். நல்லவர்களின் நட்பு கிடைக்கும்.

**கடகம்**
குடும்பத்தில் நிலவி வந்த சண்டை, குழப்பங்கள் விலகும். பூர்வீக சொத்தில் இருந்து ஒரு பங்கு உங்கள் கைக்கு வந்து சேரும். தந்தைவழி உறவினர்கள் மூலம் ஆதாயம் அடைவீர்கள்.

**சிம்மம்**
மனப்போராட்டங்கள் குறையும். எதிர்த்தவர்கள் அடங்குவார்கள். உங்கள் பேச்சில் முதிர்ச்சி தெரியும். நட்பு வட்டம் விரியும். முடிக்க முடியாமல் இருந்த விஷயத்தை பணம் தந்து முடிப்பீர்கள்.

**கன்னி**
பேச்சு, செயலில் மிகுந்த கவனம் தேவைப்படும் நாள். அனைத்து நடவடிக்கைகளிலும் சற்று கவனமாக இருங்கள். உடன்பிறந்தோரால் உதவிகள் உண்டு. நல்லவர் நட்பு வரும்.

**துலாம்**
புதிய சொத்து வாங்குவதற்குப் பத்திர பதிவு செய்வீர்கள். கடனில் ஒருபகுதியை அடைப்பதற்கு புதிய வழி பிறக்கும். இழுபறியாக இருந்த விஷயங்கள் எல்லாம் முடிவடையும்.

**விருட்சிகம்**
தள்ளிப் போன வழக்கில் தீர்ப்பு சாதகமாக வரும். தாய்க்கு சிறுசிறு உடல் உபாதைகள் தற்காலிகமாக வரும். நிதி நிலைமை மேம்படும். பழைய மனக் கசப்புகள் நீங்கும்.

**தனுசு**
மாமா வழி உறவினர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் நீங்கும். வாகனத்தில் செல்லும் போது பாதுகாப்பாகச் செல்லுங்கள். சொத்து வாங்கும்போது பத்திரங்களைச் சரி பார்த்து வாங்குங்கள்.

**மகரம்**
உங்களை பற்றிய உண்மையில்லாத விமர்சனங்களை புறக்கணியுங்கள். திருப்பம் ஒன்றால் முகம் மலரும். உற்சாகமாக வலம் வருவீர்கள். எதிர்பார்த்து ஏமாந்த தொகை கிடைப்பது பற்றிய செய்தி வரும்.

**கும்பம்**
மேலதிகாரி ஒருவருடன் இருந்த மோதல்கள் நீங்கும். குடும்பத்தில் உள்ள பெரியவர் ஒருவரின் ஆரோக்கியம் சீராகும். திருமணத் தடை நீங்கும். பணியில் கவனம் தேவை.

**மீனம்**
அடுத்தடுத்து சுபநிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். பங்குகள் மூலம் பணம் வரும். சுபவிஷயம் ஒன்றை முன்னின்று நடத்தி மகிழ்வீர்கள்.

# 184 தேர்தல் தொகுதிகளில் பெண்கள் அதிக வாக்களிப்பு

## கலக்கத்தில் கட்சிகள்

சென்னை, ஏப். 14

தமிழகத்தில், 234 சட்டசபை தொகுதிகளில், 184 தொகுதிகளில், ஆண்களை விட, பெண்கள் அதிகம் வாக்களித்துள்ளதால், அவர்கள் வாக்கு யாருக்கு சாதகமாக இருக்கும் என தெரியாமல், அரசியல் கட்சிகள் கலக்கம் அடைந்துள்ளன.

தமிழகத்தில், 3.09 கோடி ஆண்கள், 3.19 கோடி பெண்கள், 7,192 மூன்றாம் பாலினத்தவர் என, மொத்தம், 6.28 கோடி வாக்காளர்கள் உள்ளனர். சட்டசபை தேர்தல், 6ஆம் திகதி நிறைவடைந்தது. தேர்தலில், 4.57 கோடி வாக்காளர்கள் வாக்களித்தனர். இவர்களில், 2.26 கோடி பேர் ஆண்கள் 2.31 கோடி பேர் பெண்கள் 1,419 பேர் மூன்றாம் பாலினத்தவர்.

இந்த தேர்தலில், ஆண்களை விட, 5.68 லட்சம் பெண்கள் கூடுதலாக வாக்களித்துள்ளனர். மொத்தம் உள்ள, 234 சட்டசபை தொகுதிகளில், 184 தொகுதிகளில், ஆண்களை விட பெண்கள் கூடுதலாக வாக்குப் போட்டுள்ளனர். அவர்கள் தான் வெற்றியை தீர்மானிக்கக் கூடியவர்களாக உள்ளனர்.

இதேபோல, 2019 இல் வேலூர் தவிர, 38 லோக்சபா தொகுதிகளுக்கும், 18 சட்டசபை தொகுதிகளுக்கும், ஏப்ரல், 18 இல் தேர்தல் நடந்தது. அப்போது, கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், கன்னியாகுமரி லோக்சபா தொகுதிகளில் மட்டும், பெண்களை விட, ஆண் வாக்காளர்கள் அதிகம். மற்ற தொகுதிகள் அனைத்திலும், பெண் வாக்காளர்களே அதிகம். வாக்குப்பதிவின்படி, திருவள்ளூர், வடசென்னை, தென் சென்னை, மத்திய சென்னை, ஸ்ரீபெரும்புதுார், காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, தர்மபுரி, விழுப்புரம், சேலம், திருப்பூர், கோவை ஆகிய தொகுதிகளில், பெண்களை விட, ஆண்கள் அதிகம் வாக்களித்துள்ளனர்.

மீதமுள்ள, 26 தொகுதிகளில், பெண்கள் அதிக அளவில் வாக்களித்துள்ளனர். ஆண்களை விட, 5.69 லட்சம் பெண்கள் கூடுதலாக வாக்களித்தனர். இடைத்தேர்தல் நடந்த, 18 சட்டசபை தொகுதிகளில், ஓசூர், பாப்பிரெட்டிப்பட்டி, அரூர், சாத்தூர் தொகுதிகளில் மட்டும், ஆண் வாக்காளர்கள் அதிகம். தேர்தலில், பூந்தமல்லி, பெரம்பூர், சோளிங்கர், ஓசூர், பாப்பிரெட்டிப்பட்டி, ஆகிய தொகுதிகளில் மட்டும், ஆண் வாக்காளர்கள் அதிகம் வாக்களித்திருந்தனர்.

மீதமிருந்த, 13 தொகுதிகளில், ஆண் வாக்காளர்களை விட, பெண் வாக்காளர்கள் அதிகம் வாக்களித்தனர். அந்த தேர்தலில், லோக்சபா தொகுதிகள், தி.மு.க.,வுக்கு சாதகமாகவும், இடைத்தேர்தல் தொகுதிகள், அ.தி.மு.க.,வுக்கு சாதகமாகவும் அமைந்தன.

அதேபோல், இம்முறை சட்டசபை பொதுத் தேர்தலில், ஆண்களை விட, பெண்கள் அதிகம் வாக்களித்துள்ளனர். அவர்கள் வெற்றியை தீர்மானிக்கும் சக்தியாக இருப்பதால், அவர்கள் வாக்கு, எந்த கட்சிக்கு சாதகமாக இருக்கும் என்பது தெரியாமல், தி.மு.க.,வும், அ.தி.மு.க.,வும் கலக்கத்தில் உள்ளன.

# தடுப்பூசி போடுங்கள்!

## தமிழக மக்களிடம் முதல்வர் வேண்டுகோள்



சென்னை , ஏப். 14

“கொரோனா தொற்று வேகமாக பரவுவதால், தகுதியுள்ள அனைவரும், தவறாமல் மருத்துவமனைக்குச் சென்று, தடுப்பூசி போட்டுக் கொள்ளுங்கள்,” என, பொதுமக்களுக்கு முதல்வர் எடப்பாடி பழனிசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

“தமிழகத்தில், கொரோனா தடுப்பூசி போதிய அளவில் கையிருப்பு உள்ளது” என்றும், முதல்வர் தன் பேச்சில் தெளிவுபடுத்தி உள்ளார்.கொரோனா தொற்று தடுப்பு பணிகள் தொடர்பாக தலைமைச் செயலகத்தில், முதல்வர் தலைமையில், ஆலோசனை கூட்டம் நடந்தது. இக்கூட்டத்தில், துணை முதல்வர் - அமைச்சர்கள் வேலுமணி, விஜயபாஸ்கர், உதயகுமார் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர்.

கூட்டத்தில், முதல்வர் பேசியதாவது:

கடந்தாண்டு, கொரோனா வைரஸ் பரவலை தடுக்க, அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தது. நோய் கட்டுப்படுத்தப்பட்டது. இருந்தாலும், இப்போது படிப்படியாக, கொரோனா வைரஸ் பரவல், தமிழகத்தில் அதிகரித்து வருகிறது.

இதை தடுக்க, நாம் கடுமையாக பணியாற்ற வேண்டும். இது, ஒருவரிடம் இருந்து, மற்றொருவருக்கு எளிதாக பரவக்கூடிய தொற்று நோய். இந்நோய் பாதிக்கப்பட்ட பலர், சிகிச்சை பலனின்றி இறந்துள்ளனர். இதையெல்லாம், பொதுமக்கள் உன்னிப்பாக கவனித்து, அரசு அறிவித்த வழிகாட்டுதல் முறைகளை, தவறாமல் கடைப்பிடித்து செயல்படுத்த வேண்டும்.

சென்னையில், 150 முதல், 200 காய்ச்சல் முகாம்கள் செயல்பட்டு வருகின்றன. அதை, 400 ஆக உயர்த்த, நடவடிக்கை எடுக்க வேண்டும். சென்னையிலும், பிற மாநகரப் பகுதிகளிலும், அரசால் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட, பணியாளர்கள் வழியே, வீடு வீடாக சென்று, ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

ஆய்வின் போது, வீட்டில் இருப்போருக்கு, கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டால், அவர்களை உடனடியாக மருத்துவமனையில் சேர்த்து, உரிய சிகிச்சை அளிக்க வேண்டும். இதைத் தொடர்ந்து செயல்படுத்தினால் தான், கொரோனா வைரஸ் பரவலை நாம் கட்டுப்படுத்த முடியும்- என்றார்.

# விடுதலை சிறுத்தைகளை தனிமைப்படுத்த முயற்சி

## திருமாவளவன் எம்.பி. குற்றச்சாட்டு

சென்னை, ஏப். 14

விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கும், பா.ம.கவுக்கும் கொள்கை ரீதியான கருத்து வேறுபாடே தவிர, வேறு எதுவும் இல்லை. எனினும் எங்களைத் தனிமைப்படுத்தும் முயற்சி நடக்கிறது என திருமாவளவன் எம்.பி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மதுரை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கொரோனா தொற்றுப் பரவலைத் தடுக்க அரசின் தற்போதைய கட்டுப்பாடுகளுக்கு மக்கள் ஒத்துழைக்க வேண்டும். கோயில் திருவிழாக்கள் தொடர்பாக அரசு எடுத்துள்ள முடிவுக்குக் கட்டுப்பட வேண்டும்.

அரக்கோணம் அருகே கொலையான இரு இளைஞர்களின் குடும்பத்துக்கு அரசு தலா ரூ.4.30 லட்சம் நிவாரணம் வழங்கியுள்ளது. ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் இது போன்ற நிகழ்வுகளுக்கு ரூ.8 லட்சம் நிதியும், குடும்பத்தினருக்கு 2 ஏக்கர் நிலமும் வழங்கப்படுகிறது. எனவே பாதிக்கப்பட்டோர் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலையும், நிலமும் வழங்க வேண்டும்.

பா.ம.க இளைஞர் அணித் தலைவர் அன்புமணி ராமதாஸ் விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கு எதிராக கருத்துகளைத் தெரிவித்து வருகிறார். பா.ம.கவுடன் கொள்கை ரீதியாக மட்டுமே எங்கள் கட்சி வேறுபடுகிறதே தவிர, வேறு எதுவும் இல்லை.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விழியாகச் செயல்படும் எங்கள் இயக்கம் சாதி, மத, இனத்தைக் கடந்தது. எனினும், எங்களைத் தனிமைப்படுத்தும் முயற்சி நடக்கிறது - என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவில் சமூக செயல்பாட்டாளர் அசேல சம்பத் நேற்றுக் கைது!

கொழும்பு, ஏப். 14

பொதுமக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பின் ஒருங்கிணைப்பாளரும் சிவில் சமூக செயல்பாட்டாளருமான அசேல சம்பத் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டார்.

தனது பேஸ்புக் பக்கத்தில் பொலிஸார் தன்னைக் கைது செய்து அழைத்துச் செல்லும் வீடியோவை அசேல சம்பத் வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, அசேல சம்பத் கைது செய்யப்பட்டுள்ளமையை பொலிஸ் ஊடகப் பிரிவு உறுதிப்படுத்தியுள்ளது.

எனினும் அவர் என்ன குற்றச்சாட்டுக்களின் கீழ் கைது செய்யப்பட்டார் என்பது உள்ளிட்ட மேலதிக தகவல்கள் வெளியிடப்படவில்லை.

புத்தாண்டை முன்னிட்டு பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்ட 12 அத்தியாவசியப் பொருட்களை உள்ளடக்கிய ஆயிரம் ரூபா பெறுமதியான சதொச நிவாரணப் பொதி குறித்து அசேல சம்பத் அவதூறாகப் பேசியதாக அவருக்கு எதிராக சி.ஐ.டியில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக வர்த்தக கத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

சதொச நிவாரணப் பொதி குறித்து அவதூறாகப் பேசியவர்களிடம் 500 மில்லியன் ரூபா நட்டஈடு கோரி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

இந்நிலையில் அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் முறைப்பாட்டின் அடிப்படையிலேயே அசேல சம்பத் கைது செய்யப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

# செல்வம் எம்.பியின் அஞ்சல் முத்திரையை மோசடியாகப் பயன்படுத்தியதா ஐ.தே.க.?

கொழும்பு, ஏப்.14

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் பாராளுமன்ற அஞ்சல் முத்திரைகளை ஐ.தே.க. மோசடியாக பயன்படுத்தியதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

பாராளுமன்ற உறுப்பினர்களின் தேவைக்காக அஞ்சல் முத்திரைகள் வழங்கப்படுவது வழக்கம். அந்த அஞ்சல் முத்திரைக்கு மேலாக, பாராளுமன்ற உறுப்பினர் தனது இலட்சினையை பொறித்து, உத்தியோகபூர்வ தேவைகளுக்காக பயன்படுத்திக் கொள்ளலாம்.

இந்த வசதியை பயன்படுத்தியே பல எம்.பிக்கள் தேர்தல் காலங்களில் பொதுமக்களுக்குக் கடிதங்களை அனுப்புவார்கள்.

தற்போது ஐ.தே.கவில் எந்த எம்.பியும் கிடையாது. வீணாக பணம் செலவழித்து அஞ்சலை அனுப்பாமல், யாராவது எம்.பியின் பெயரில் கடிதங்களை அனுப்புவோம் என யோசித்தார்களோ, என்னவோ, செல்வம் அடைக்கலநாதன் எம்.பியின் இலட்சினை பொறிக்கப்பட்ட அரச பணி கடித உறைகளை ஐ.தே.கவினர் பயன்படுத்திக் கடிதங்களை அனுப்பியதாக சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதுபற்றி தான் செய்திகளை படித்தே அறிந்ததாகவும் விசாரணையை கோரியுள்ளதாகவும் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

செல்வம் அடைக்கலநாதனின் அலுவலக பணியாளர்கள் யாரேனும் இலட்சினையை வழங்கினார்களா அல்லது இலட்சினை போலியாக தயாரிக்கப்பட்டதா அல்லது இதில் வேறேதும் விவகாரங்கள் அடங்கியுள்ளதா என்பது இதுவரை தெரியவரவில்லை.

# 151 பேர் குணமடைந்தனர்

கொழும்பு, ஏப்.14

இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களுள் நேற்று மேலும் 151 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பினர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனா தொற்றுக்குள்ளானவர்களில் 91,926 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதேவேளை, கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை 604 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையம் மூடல்

கொழும்பு, ஏப். 14

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையம் நேற்று பிற்பகல் முதல் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை தற்காலிகமாக மூடப்படவுள்ளதாக வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

புத்தாண்டை முன்னிட்டு இவ்வாறு மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தம்புள்ளை பொருளாதார மத்திய நிலைய வர்த்தக சங்கத்தின் தலைவர் யூ.பி. ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்திற்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ள காய்கறிகள் அனைத்தும் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதன்படி, தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தின் ஊடாக 6 மில்லியன் கிலோகிராம் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் வர்த்தக சங்கத்தின் தலைவர் யூ.பி.ஏக்கநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.





# பறிபோகுமா ஜீவனின் இராஜாங்க அமைச்சு?

கொழும்பு, ஏப். 14

தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தாய்மாரை இழிவுபடுத்தி ஆற்றிய உரையையடுத்து கட்சி உறுப்பினர்கள் கடும் அதிருப்தியடைந்துள்ளனர் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார் என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதேநேரம், இராஜாங்க அமைச்சுப் பதவியிலிருந்து நீக்குமாறு அரசுக்கு அழுத்தங்கள் கொடுப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், பொகவந்தலாவையில் நிகழ்வொன்றில் கலந்துகொண்டிருந்தார்.

இந்த நிகழ்வில் அவர் ஆயிரம் ரூபா பெற்றுக் கொடுத்த விடயம் குறித்து பேசும்போது, அரசியல்வாதியொருவர் ஆயிரம் ரூபா விடயத்தில் காட்டிக் கொடுத்ததாகக் கூறியது மட்டுமல்லாது, தாயையரையும் மிக மோசமான வார்த்தைகளில் பேசியிருந்தார்.

இது தொடர்பான காணொலி சமூக வலைத்தளங்களில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது டன், பலரும் கடும் கண்டனங்களைத் தெரிவித்திருந்தனர்.

இதையடுத்து, அவர் தான் பேசிய வார்த்தை தவறானது என்றும், இனி இவ்வாறான தவறு இடம்பெறாது எனவும் காணொலிப் பதிவினூடாக தெரிவித்தார்.

எனினும், அவர் மன்னிப்பு என்ற வார்த்தையை பயன்படுத்தவில்லை என்பது பெரும் பேசுபொருளாகியது.

இதையடுத்து, கட்சி வட்டாரத்திலுள்ள பல பெண்களும், பெண் உறுப்பினர்களும் அவரது உரையில் பிழையிருப்பதாக சுட்டிக்காட்டியிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், கட்சி மட்டத்திலுள்ள பெண்கள் அவருடைய உரை தொடர்பாக பெரும் அதிருப்தியிலுள்ளனர் எனவும் குறித்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு ஆதரவளிக்கும் பல பெண்கள் அமைப்புகளும், அவருடைய உரை குறித்து கடும் கண்டனங்களைத் தெரிவித்துள்ளதுடன், அவருடைய செயல்பாடு குறித்து கவலையடைவதாகவும் தெரிவித்துள்ளதாக அறியமுடிகின்றது.

அதேபோன்று, இந்தியத் தூதரகத்தின் அதிகாரிகளும் ஜீவன் தொண்டமானின் உரைக்கு கவலை தெரிவித்துள்ளதாகவும் கட்சி மட்டத்தில் இவ்வாறான பேச்சுகள் இடம்பெற்றாலும் பொது வெளியில் இவ்வாறான வார்த்தைப் பிரயோகத்தை பயன்படுத்துவது பொருத்தமற்றது எனத் தெரிவித்துள்ளதாகவும் அறியக் கிடைக்கின்றது.

இதேவேளை, இராஜாங்க அமைச்சராக இருந்து கொண்டு, இவ்வாறான வார்த்தைப் பிரயோகங்களை பிரயோகிப்பது, அரசுக்குப் பெரும் பாதிப்பாக அமையக்கூடும் எனப் பல தரப்பினரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால், ஜீவன் தொண்டமானை இராஜாங்க அமைச்சுப் பதவியிலிருந்து நீக்குமாறு அரசிடம் கோரிக்கை விடுப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், ஜீவன் தொண்டமானின் உரை குறித்து, கட்சி மட்டத்தில் முக்கிய கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன எனவும், இதன்போது பலரும் தங்களுடைய அதிருப்தியைத் தெரிவிக்கவுள்ளனர் எனவும் அறியமுடிகின்றது.

ஜீவன் தொண்டமானின் உரையை அடுத்து, பல தரப்பினரும் தொலைபேசி அழைப்பினூடாகக் கட்சியினருக்குக் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# யாழில் சோபை இழந்த புத்தாண்டு வியாபாரம்!

யாழ்ப்பாணம், ஏப். 14

யாழ்ப்பாணத்தில் இம்முறை சித்திரைப் புத்தாண்டு வியாபாரம் சோபையிழந்து காணப்பட்டது. இதனால், வர்த்தகர்கள் பெரும் கவலையடைந்தனர்.

யாழ்ப்பாணம் மாநகர வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள், பணியாளர்களுக்கு கடந்த மாத இறுதியில் ஏற்பட்ட கொரோனா தொற்று காரணமாக புடவை விற்பனை நிலையங்கள் இரண்டு வாரங்களாக மூடப்பட்டிருந்தன.

எனினும், கடந்த வாரம் வர்த்தக நிலையங்களை மீளத் திறக்க அனுமதியளிக்கப்பட்டபோதும் கொவிட்-19 நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள், பணியாளர்களின் கடைகள் திறக்க அனுமதிக்கப்படவில்லை.

கொரோனா பரவல் அச்சநிலை காரணமாக யாழ்ப்பாணம் மாநகரில் இம்முறை சித்திரைப் புத்தாண்டு புடைவை வியாபாரம் முற்றாகப் பாதிக்கப்பட்டது.

இதனால், சிறு வர்த்தக நிலையங்களே அதிகமாகப் பாதிக்கப்பட்டன. அத்துடன், யாழ்ப்பாணத்தில் அனைத்து பிரதேசங்களிலும் நடைபாதை வியாபாரம் அமோகமாக இடம்பெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித், கூட்டமைப்பு, ஜே.வி.பியே ஈஸ்டர் தாக்குதலுக்குப் பொறுப்பு!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறுகிறார்



**கொழும்பு, ஏப்.14**

**உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி என்பன பொறுப்புக் கூறவேண்டும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.**

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை மறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்வதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிக்கும் குற்றச்சாட்டு பாரதூரமானதெனவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று சுமார் ஒரு வருடத்துக்கு மேலாக நல்லாட்சி அரசாங்கமே ஆட்சியில் இருந்தது. அந்தக் காலப்பகுதியில் அவர்களுக்கு பிரதான சூத்திரதாரியை கண்டறிய முடியாமல்போனது.

இந்த நிலையில், நாட்டினதும், நாட்டு மக்களினதும் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு, செயற்பட வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

எனினும், நல்லாட்சி அரசாங்கம் அதனை மேற்கொள்ளவில்லை. நல்லாட்சி அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பியும் இந்த குற்றச்சாட்டுக்களிலிருந்து விலகிக் கொள்ள முடியாது-என்றார்.

# 2 சிவில் பாதுகாப்பு படையினர் அம்பாறை விபத்தில் உயிரிழப்பு

அம்பாறை, ஏப். 14

அம்பாறை- பன்னல்கம பகுதியில் அதிவேகமாக பயணித்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்தனர்.

உயிரிழந்த இருவரும், சிவில் பாதுகாப்பு படை வீரர்கள் என்றும், இருவருக்கும் வயது 48 எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# இலங்கைக்கு வருகிறார் சீன பாதுகாப்பு அமைச்சர்



கொழும்பு, ஏப். 14

சீன பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் வெய் பெங்கி தமிழ் - சிங்கள புத்தாண்டுக்கு பின்னர் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார் என அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை விஜயத்தின்போது ஜனாதிபதி, பிரதமர், மற்றும் பாதுகாப்பு துறை அதிகாரிகளுடன் சீன பாதுகாப்பு அமைச்சர் பேச்சு நடத்துவார் எனவும் தெரியவருகின்றது.

# எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் ஒரு கட்சி தொகுதியில் 3 வேட்பாளர்களை நிறுத்தமுடியும்

## அரசின் முன்மொழிவு இதுதான்

கொழும்பு, ஏப். 14

வரவிருக்கும் மாகாண சபை தேர்தல 70 - 30 என்ற விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் நடத்த அரசு திட்டமிட்டுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

பொலநறுவையில் செய்தியாளர்களிடம் பேசிய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் இராஜாங்க அமைச்சர், முன்மொழியப்பட்ட முறையின் கீழ், அரசியல் கட்சியினால் ஒரு தொகுதியில் மூன்று வேட்பாளர்களை பரிந்துரைக்க முடியும் என்று கூறினார்.

"ஒரு குறிப்பிட்ட வாக்காளருக்கு தனது தொகுதியில் அரசியல் கட்சியின் ஒரு வேட்பாளர் மட்டுமே இருந்தால், அந்த வேட்பாளர் பொதுமக்களிடையே கெட்ட பெயரைப் பெற்றால், வாக்காளர்கள் புறக்கணிக்கவோ அல்லது விலகவோ வாய்ப்புள்ளது. இது அந்த வேட்பாளரை ஊக்குவிக்கும் கட்சிக்கு பாதகமாக இருக்கும்" என்று ரணசிங்க சுட்டிக்காட்டினார்.

"வாக்காளர்கள் தங்களுக்கு பொறுப்புக் கூறும் ஓர் உறுப்பினரை எதிர்பார்க்கிறார்கள். எங்களால் முன்மொழியப்பட்ட முறையின் கீழ், பரிந்துரைக்கப்பட்ட மூன்று பேரில் மக்கள் விரும்பும் ஒரு குறிப்பிட்ட வேட்பாளருக்கு வாக்களிக்க முடியும்"என்று அவர் கூறினார்.

இலங்கையின் நீண்டகால தாமதமான மாகாண சபைத் தேர்தலுக்கான திகதி இன்னும் அறிவிக்கப்படவில்லை.

மாகாண சபைத் தேர்தல் முந்தைய மாகாண சபைத் தேர்தல் சட்டத்தின் கீழ் அல்லது முன்மொழியப்பட்ட புதிய (திருத்த) சட்டத்தின் கீழ் அதன் "சிக்கல்களை" நீக்கி விரைவில் நடத்த வேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த மாதம் கூறினார்.

திருத்தப்பட்ட மாகாண சபைச் சட்டம், தொகுதிகளின் புதிய வரம்பு, பெண் வேட்பாளர்களுக்கான ஒதுக்கீடு மற்றும் பிற மாற்றங்களை முன்மொழிந்த போதும் முன்னாள் அரசினால் தோற்கடிக்கப்பட்டது."

மாகாண சபை வாக்கெடுப்புகள் பழைய அல்லது புதிய முறையின் கீழ் நடத்தப்படலாம். ஆனால், சட்டத்தை திருத்துவதன் மூலம் இலங்கையின் உயர் நீதிமன்றம் தீர்மானித்தது. முந்தைய விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் தேர்தல்களை நடத்துவதற்கான (திருத்த) சட்டத்தில் திருத்தங்களை ராஜபக்ஷ அரசு இன்னும் நிறைவேற்றவில்லை.

இலங்கையில் உள்ள ஒன்பது மாகாணங்களும் தற்போது ஐந்தாண்டு கால அவகாசத்தை பல்வேறு புள்ளிகளில் முடித்ததைத் தொடர்ந்து அந்தந்த ஆளுநர்களால் நடத்தப்படுகின்றன.

# குளக்கட்டிலிருந்து வீழ்ந்தது ஓட்டோ

வவுனியா, ஏப். 14

வவுனியா- வைரவப்புளியங்குளம் குளக்கட்டினுள் ஓட்டோ வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் இரவு 7.00 மணியளவில் இவ்விபத்து இடம்பெற்றது.

கூமாங்குளம் பிரதான வீதியூடாக வவுனியா நகர் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த ஓட்டோ வைரவப்புளியங்குளம் குளக்கட்டை அண்மித்த சமயத்தில் சாரதியின் கட்டுப்பாட்டை யிழந்து குளக்கட்டிலிருந்து கீழே வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் ஓட்டோச் சாரதி காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(அ)




# பொலிஸ் அதிகாரியை தாக்கிய அங்காடி வியாபாரிக்கு மறியல்

கொழும்பு, ஏப். 14

பசறை நகரில கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை கூரிய ஆயுதத்தால் தாக்கிய நபரை எதிர்வரும் 22 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பதுளை நீதிவான் உத்தரவிட்டார்.

பசறை நகரில் பஸ் தரிப்பிடத்திற்கு அருகாமையில் உள்ள அங்காடியில் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த நபர் ஒருவர் பாதசாரிகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் விதத்தில் நடந்துகொண்டார்.

இது தொடர்பில் பொலிஸின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இதனையடுத்து அப்பகுதியில் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் அவ்விடத்திற்கு சென்று பாதசாரிகளுக்கு இடையூறு விளைவிக்க வேண்டாம் என குறித்த நபருக்கு கூறியுள்ளார்.

இதனால், ஆத்திரமுற்ற அந்நபர் கையில் வைத்திருந்த கூரிய ஆயுதத்தால் பொலிஸ் உத்தியோகத்தரை தாக்கியுள்ளார்.இதன்போது காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் அயலவர்கள் உதவியுடன் பசறை வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். சந்தேகநபரை பசறை பொலிஸார் கைது செய்தனர்.

இந்நிலையில் பதுளை நீதிவான் முன்னிலையில் அவர் ஆஜர்படுத்தப்பட்டார். எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஹிட்லரை போன்று கோட்டாபய ஆட்சி

## மக்கள் எதிர்பார்ப்பு என்கிறார் அமுனுகம

கண்டி,ஏப்.14

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஹிட்லரைப் போன்று ஆட்சியை முன்னெடுக்க வேண்டும் என்பதே அவருக்கு வாக்களித்த 69 இலட்சம் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

அவர் அவ்வாறு செயல்படாமை காரணமாகவே அவர் மீது குற்றம்சுமத்தப்படுகின்றது என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் ஏதேனுமொரு வகையில் சர்வாதிகார ஆட்சியை முன்னெடுப்பார் என்று நாட்டு மக்கள் எதிர்பார்த்தனர்.

எனினும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவ்வாறு ஹிட்லரைப் போன்று செயல்படாமையின் காரணமாகவே அவர் மீது குற்றம்சுமத்துகின்றனர்.

எவ்வாறிருப்பினும் தற்போது நாட்டிலுள்ள சில துறைகளின் செயல்பாடுகளால் ஜனாதிபதி ஹிட்லராகும் நிலைக்குத் தள்ளப்பட்டால் அவர் அவ்வாறு செயல்பட வாய்ப்புள்ளது என்று நான் எண்ணுகின்றேன். அவ்வாறெனில் யாரும் அவர் மீது குற்றம்சுமத்தமாட்டார்கள்.

தேர்தல் காலத்தில் மகா சங்கத்தினரும் ஹிட்லர் ஆட்சியானாலும் கவலையில்லை என்றவாறான கருத்துக்களை வெளியிட்டிருந்தனர். ஜனாதிபதிக்கு வாக்களித்த 69 இலட்சம் மக்களும் அவர் ஹிட்லரைப் போன்று ஆட்சி செய்ய வேண்டும் என்பதையே எதிர்பார்க்கின்றனர்.

எனினும் அவ்வாறு ஆட்சியை முன்னெடுக்க ஜனாதிபதி விரும்புவார் என்று நாம் எதிர்பார்க்கவில்லை. மாறாக அவர் அந்த நிலைக்குத் தள்ளப்பட்டால் அனைத்தும் சரியாகிவிடும் - என்றார். (எ)

# இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இல்லாதொழிக்க ஒத்துழையுங்கள்

## மக்களிடம் சரத் வீரசேகர கோரிக்கை



கொழும்பு,ஏப்.14

இஸ்லாமிய அடிப்படைவாத செயல்பாடுகளை இல்லாதொழிக்க நாட்டு மக்கள் பாதுகாப்புத் தரப்பினருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அடிப்படைவாத கொள்கை எவ்வழியில் தோற்றம் பெற்றாலும் அதற்கு இடமளிக்க முடியாது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

ஐ.எஸ்.ஐ.எஸ். அடிப்படைவாதம், வஹாப் வாதம், சலபி வாதம் என மதம் மற்றும் கொள்கை அடிப்படைவாதம் காணப்படுகின்றது.

உருவ வழிபாட்டுக்கு இவர்கள் முழுமையாக எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றனர். தங்கள் மதக் கொள்கையை பரப்புவதற்கு பிற மதத்தவர்களைக் கொல்வது சரி என்ற நிலைப்பாட்டில் உள்ளனர்.

அடிப்படைவாதத்தை இல்லாதொழிக்க அரசாங்கம் சிறந்த நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது. இதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பு அத்தியாவசியமானது. பாதுகாப்பு தரப்பினராலும், புலனாய்வுப் பிரிவினராலும் மாத்திரம் அடிப்படைவாதத்தை இல்லாதொழித்து தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாது.

அடிப்படைவாதம் தொடர்பில் நாட்டு மக்கள் பாதுகாப்புத் தரப்பினருக்கு உரிய தகவல்களை வழங்க வேண்டும்.

தீவிர மதக் கொள்கையை உடையவர்கள் ஒரு கட்டத்தில் அடிப்படைவாதிகளாக மாற்றமடைகின்றனர். இறுதியில் பயங்கரவாதிகளாக தங்களை அடையாளப்படுத்திக் கொள்கின்றனர். ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் இவ்வாறான பின்னணியில் நடத்தப்பட்டது.

ஈஸ்டர் குண்டுத்தாக்குதலுடன் தொடர்புடையவர்களை சட்டத்தின் முன்னிலைப்படுத்த அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அடிப்படைவாதத் தாக்குதல்கள் நாட்டில் எதிர்காலத்தில் இடம்பெறாத அளவுக்கு கடினமான பல தீர்மானங்களை எடுக்க நேரிட்டுள்ளது.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பிலான விசாரணை அறிக்கை குறித்து எதிர்த்தரப்பினர் மாறுபட்ட பல கருத்துக்களை வெளியிடுகின்றனர்.

குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் அறிந்திருந்தால் அதனை பாதுகாப்புத் தரப்பினருக்கு அறிவிக்குமாறு தெரிவித்துள்ளோம்.

ஆனால், எதிர்த்தரப்பினர் இதுவரையில் எவ்வித முறைப்பாடுகளையும் செய்யவில்லை. ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையினையும் அரசியல் தேவைக்காக எதிர்க்கட்சியினர் பயன்படுத்திக் கொள்கின்றனர்- என்றார். (எ)

# புத்தாண்டு காலப் பகுதியில் எரிபொருள் பற்றாக்குறை?

கொழும்பு, ஏப் . 14

நாட்டில் புத்தாண்டு காலத்தில் எரிபொருள் பாவனை அதிகரித்துள்ளதாக, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாளாந்த எரிபொருள் பாவனை 4 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் வரை அதிகரித்துள்ளதாக, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில், புத்தாண்டு காலத்தில் எரிபொருள் பற்றாக்குறை ஏற்படும் சாத்தியம் காணப்படுவதாக, தனியார் எரிபொருள் தாங்கி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தமக்கு வழங்கப்படவேண்டிய கொடுப்பனவுகள் உரிய முறையில் வழங்கப்படாமையே இதற்கான காரணம் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# இடிந்து விழுந்தது சுவர்! நோர்வூட்டில் ஐவர் பாதிப்பு

கொழும்பு, ஏப். 14

நோர்வூட் பிரதேச சபைக்குட்பட்ட இன்வெரி தோட்டத்தில் தொழிலாளர்களின் குடியிருப்புமீது சுவர் இடிந்து விழுந்ததால் வீடுகள் சேதமடைந்துள்ளன.

இதனால் ஐவர் பாதிக்கப்பட்டுள்ளனர். இப்பகுதியில் நேற்று முன் தினம் மாலை கடும் மழை பெய்துள்ளது. இதன்போதே குறித்த அனர்த்தமும் இடம்பெற்றுள்ளது.

அனர்த்தத்தின்போது தெய்வாதீனமாக எவருக்கும் உயிர் ஆபத்தோ, காயங்களோ ஏற்படவில்லை.

குடியிருப்பில் பாரிய வெடிப்புக்கள் ஏற்பட்டிருப்பதாக இன்வெரி தோட்ட நிர்வாகத்திற்கு குடியிருப்பாளர்கள் அறிவித்த போதிலும், அது தொடர்பில் தோட்ட நிர்வாகம் கவனத்தில் எடுக்கவில்லை.

சம்பவ இடத்திற்கு நேற்று நோர்வூட் பிரதேச சபையின் தலைவர் கே.கே.ரவி சென்று பார்வையிட்டதுடன், இவர்களுக்கு மனித வள அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக வீடுகளை கட்டிக்கொடுக்க ஏற்பாடுகளை செய்யப்போவதாகவும் தெரிவித்தார்.

# இலங்கையுடன் ஒத்துழைப்போம்

## சீனத் தூதுவர் புத்தாண்டு வாழ்த்து



கொழும்பு, ஏப். 14

இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் சீன ஜனாதிபதி ஷி ஜின் பிங் ஆகிய இரு நாட்டு தலைவர்களும் உருவாக்கிய முக்கிய உடன்பாடுகளை வழிகாட்டலாகக் கொண்டு சீன-இலங்கை ஒத்துழைப்புக் கூட்டுறவைத் தொடர்ந்து முன்னெடுத்து, மேலும் உயர் நிலைக்கு செல்ல முயற்சிகளை முன்னெடுப்பதாக இலங்கையிலுள்ள சீனத் தூதுவர் கீய் ஷென்ஹோங் தெரிவித்துள்ளார்.

தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

*சீன தூதுவரின் வாழ்த்துச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது :*

*2021 ஆம் ஆண்டு சிங்கள - தமிழ் புத்தாண்டை முன்னிட்டு இலங்கையிலுள்ள சீனத் தூதரகம் , சீனத் தொழில் நிறுவனங்கள் மற்றும் இலங்கை வாழ் சீனர்களின் சார்பில் தனிநபர் பெயரில் இலங்கையின் பல்வேறு இன மக்களுக்கும் சீன - இலங்கை உறவு மீது அக்கறை செலுத்தும் நண்பர்களுக்கும் உளமார்ந்த மற்றும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் தெரிவிக்கிறேன்.*

கடந்த ஓராண்டில் சீனா - இலங்கை இடையே பரஸ்பர அரசியல் நம்பிக்கை இடைவிடாமல் மேம்பட்டு வந்துள்ளது.

சீன ஜனாதிபதி ஷி ஜின் பிங் மற்றும் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் இரு முறை தொலைபேசியில் உரையாடினர்.

இதனிடையில் தொலை நோக்குப் பார்வையில் சீன - இலங்கை உறவுக்கு வழிகாட்டி இரு நாட்டு ஒத்துழைப்புகள் குறித்து முக்கிய உடன்பாடுகளை உருவாக்கியுள்ளனர்.

பலதரப்பு அரங்குகளில் சர்வதேசத்தின் நேர்மை மற்றும் நீதியையும் இரு தரப்புகளின் கூட்டு நலன்களையும் பேணிக்காக்கும் வகையில் நாங்கள் பலமுறை ஒற்றுமை மற்றும் ஒருங்கிணைப்புடன் செயல்பட்டுள்ளோம்.

கடந்த ஓராண்டில் இரு நாடுகளும் ஒன்றிணைந்து கொவிட்-19 நோய் தொற்றை எதிர்த்து போராடியுள்ளன. இதனிடையில் இலங்கையின் பல்வேறு துறையினர்களும் அளித்த உறுதியான ஆதரவுகளை சீன மக்கள் மறக்க மாட்டார்கள்.

சீனா, இலங்கைக்கு பொருட்கள் மற்றும் தடுப்பூசிகளை நன்கொடையாக அளித்ததோடு நிதி ஆதரவுகளையும் வழங்கியுள்ளது. இரு நாட்டு மக்கள் இன்னல்களைக் கூட்டாகச் சமாளித்து வரும் போக்கில் நம் பாரம்பரிய நல்லுறவு மேலும் மேம்பட்டுள்ளது.

கடந்த ஓராண்டில் பல்வேறு துறைகளில் நடைமுறைக்கு ஏற்ற ஒத்துழைப்புகளை இரு நாடுகள் முன்னெடுத்து சென்றுள்ளன. பொருளாதார வளர்ச்சியின் புதிய உந்து சக்தியாக விளங்கும் கொழும்பு துறைமுக நகரம், அம்பாந்தோட்டை துறைமுகம் ஆகியவற்றின் சாதனைகள் தெளிவாகக் காணப்படுகின்றன.

சீன - இலங்கை தண்ணீர் தொழில் நுட்பத்துக்கான கூட்டு ஆய்வு மையம், தேசிய சிறுநீரக நோய் மருத்துவ மனை உள்ளிட்ட மக்கள் வாழ்க்கை நலன் சார்ந்த சில செயல்திட்டங்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளன.

சில பயன்பாட்டிற்கு வர உள்ளன. இவை இலங்கையின் பொருளாதாரச் சமூகத்தின் நிலையான வளர்ச்சிக்கும் 'பி.ஆர்.ஐ' கட்டுமானம் இலங்கையின் 'நாட்டைக் கட்டியெழுப்பும் செழிப்பான பார்வை' எனும் கொள்கையுடன் ஒன்றிணைவதற்கும் வலுவான ஆற்றலை வழங்கும்.

புதியதோர் ஆண்டில் ஒரு புதிய தொடக்கம் இருக்கும். இரு நாட்டுத் தலைவர்கள் உருவாக்கிய முக்கிய உடன்பாடுகளை வழிகாட்டலாகக் கொண்டு, சீன - இலங்கை ஒத்துழைப்புக் கூட்டுறவைத் தொடர்ந்து முன்னெடுத்து மேலும் உயர் நிலைக்கு செல்லவும் மேலதிக சாதனைகளைப் பெறவும் இரு நாடுகள் மற்றும் இரு நாட்டு மக்கள் பயன் அடையச் செய்யவும் பாடுபடுகின்றோம்-என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய – மியன்மார் எல்லையில் 57 ஆண்டுகள்: பண்பாட்டை மறவாத மணிப்பூர் தமிழர்கள்

● ராகவேந்திர ராவ்

இந்தியாவின் வடகிழக்கு மாநிலத்தில் சர்வதேச எல்லையை ஒட்டியுள்ள ஒரு நகரத்தில் ஓர் அற்புதமான தென்னிந்தியக் கோயில் காணப்படுவது வியப்பாகத்தான் இருக்கும். அந்த ஊரில் சுமார் 3,000 தமிழ்ச் சமூகத்தினர் வாழ்கிறார்கள் என்ற தகவல் மேலும் வியப்பளிக்கிறது.

மணிப்பூரின் எல்லை நகரமான மோரேவிலிருந்து பிபிசி இதை உங்களுக்குச் சொல்கிறது. தொலைதூரத்தில் உள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் இந்த மணிப்பூரி நகரத்தை தங்கள் வசிப்பிடமாக மாற்றிக்கொண்டது மட்டுமல்லாமல், பல தசாப்தங்களாக இங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் அவர்கள் இந்தக் கலாசாரத்தின் ஒருங்கிணைந்த அங்கத்தினர்களாகவே மாறிவிட்டனர்.

ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி, ஸ்ரீ முனீஸ்வரர் கோயிலின் பிரமாண்டமான வளாகம் மோரேயில் தமிழர்கள் இருப்பதற்கான வெளிப்படையான எடுத்துக்காட்டாகும். இந்தக் கோயில் இந்திய-மியன்மார் எல்லையை முழுவதுமாக ஒட்டியுள்ளது.

அதன் முற்றமானது இரு நாடுகளுக்கும் இடையில் வரும் "நோ மேன்ஸ் லேண்ட்" எனப்படும் எந்த நாட்டுக்கும் உரிமையில்லாத நிலப்பகுதியுடன் இணைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**தமிழர்கள் எப்படி மணிப்பூர் வந்தனர்?**

பர்மா (இன்றைய மியன்மார் ) ஆங்கில ஆட்சியின் கீழ் இருந்தபோது, ஆங்கிலேயர்கள் பல தமிழர்களைக் கூலி வேலைகளுக்காக அழைத்துச் சென்றனர். பர்மா 1948இல் சுதந்திர நாடானது. ஆனால், தமிழர்கள் உட்பட பல இந்திய மக்கள் அங்கு குடியேறவிரும்பினர். 1962இல் பர்மா ஜனநாயகத்திலிருந்து இராணுவ ஆட்சிக்குத் மாறியபோது, அங்கு வாழும் இந்திய மக்களுக்குக் கடினமாகிவிட்டது.


இராணுவ ஆட்சி இந்தியர்களின் சொத்துகளையும் ஜனநாயக காலத்தில் இந்தியக் குடிமக்களுக்குக் கிடைத்த உரிமைகளையும் பறித்தது. அவர்களுக்கு எதிரான பாகுபாடு தொடங்கியது.

அப்போதைய ரங்கூனில் (இப்போது யங்கூன்) பிறந்து, தமது எட்டாவது வயதில் மோரேவுக்கு வந்த கே.பி.எஸ் மணியம், ”1964ஆம் ஆண்டில், பிரதமர் ஜவஹர்லால் நேரு ரங்கூனுக்கு வந்து இந்தியச் சமூகத்தைச் சந்தித்தார். இந்திய மக்கள் நாடு திரும்ப விரும்புவதாக அவரிடம் கூறினர். நேரு கப்பலை அனுப்பினார், இலவசமாக இந்தியர்களை மீட்டு வரும் பணி தொடங்கியது. தமிழர்களும் இதே போலத்தான் இந்தியாவுக்கு வந்தனர்.

மணியம் இப்போது மோரேயில் உள்ள தமிழ்க் கோயிலின் மேம்பாட்டுக் குழுவின் துணைத் தலைவராக உள்ளார். பர்மாவிலிருந்து தமிழர்கள் வந்த பிறகு, இந்திய அரசு ஓர் அகதி முகாமை அமைத்து மக்களின் மறுவாழ்வுக்கு உதவியது. ஆனால், தமிழகத்திற்குத் திரும்பி வருவதில் தமிழர்களுக்குப் பல சிக்கல்கள் இருந்தன என்று அவர் கூறுகிறார்.

பர்மாவில் பல ஆண்டுகள் வாழ்ந்த பிறகு, அவரது வாழ்க்கை முறையும் உணவும் முற்றிலும் மாறிவிட்டன. திரும்பி வந்த பிறகு, இவர்களின் வாழ்வாதாரத்திற்கும் வழியில்லாமல் போனது. பர்மாவிலிருந்து அவர்கள் கொண்டு வந்த பொருட்களைச் சிறிது சிறிதாக விற்றுத் தங்கள் வாழ்க்கையை நடத்தி வந்தனர்.

"இந்தப் புதிய சூழலில் இவர்களால் தங்கள் வாழ்க்கையைத் திறம்பட அமைத்துக்கொள்ள இயலவில்லை. எனவே, பல தமிழர்கள் பர்மாவுக்கு திரும்பிச் செல்ல முடிவு செய்து, மணிப்பூரில் உள்ள மோரேவுக்கு வந்தார்கள். அங்கிருந்து எல்லையைத் தாண்டிவிடலாம் என்ற நம்பிக்கையில் வந்தார்கள். காரணம், நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் "ஆசாத் ஹிந்த்" படை, இந்தப் பகுதி வழியாகத்தான் பர்மாவுக்குள் சென்றது. அதில் பல தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த மூத்த குடிமக்கள் இடம்பெற்றிருந்தனர். இவர்களுக்கு பர்மா செல்லும் அனைத்து வழிகளும் அத்துபடியாக இருந்தது. எனவே அவர்கள் பர்மா செல்லும் ஆசையில் தமிழ்நாட்டிலிருந்து மணிப்பூர் வந்தனர்," என்று மணியம் கூறுகிறார்.



"அவர் மணிப்பூரில் குடியேற வரவில்லை, இங்கிருந்து பர்மா செல்வதற்காகவே வந்தனர்" என்கிறார் இவர்.

1964ஆம் ஆண்டில், 12 தமிழ்க் குடும்பங்கள் இங்கு இரண்டு குழுக்களாக வந்தன - ஒரு குழுவில் 7 குடும்பங்கள், மற்றொன்றில் 5 குடும்பங்கள் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

முதல் 7 குடும்பங்களின் குழு பர்மாவுக்குள் நுழைய முயன்றது. ஆனால் அவர்களை கைது செய்து, கண்களைக் கட்டி ஒரு மாதம் ஒரு பள்ளிக்கூட வளாகத்தில் அடைத்து வைத்தது பர்மிய ராணுவம். அதன் பின்னர் இவர்கள் மோரே காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். உள்ளூர் மொழியறியாத காரணத்தாலும், வாழ்வாதாரம் இல்லாததாலும், மோரே காவல்துறையினர் இவர்களை மீண்டும் தமிழகத்திற்குச் செல்லுமாறு அறிவுறுத்தி, இம்பாலுக்கு அனுப்பி வைத்தனர்.

இந்தக் குடும்பம் இம்பாலில் ஒரு தர்ம சத்திரத்தில் வசிக்கத் தொடங்கியபோது, அவர்கள் ஒரு தென்னிந்திய அதிகாரியைச் சந்தித்தனர். அவருக்கு உள்ளூர் மக்களின் மொழியறிவு சற்று இருந்தது.

மோரே இந்தியாவின் ஒரு பகுதி என்றும், இந்த மக்கள் அங்கு சென்று வாழலாம் என்றும் அந்த அதிகாரி சொன்னதாக மணியம் கூறுகிறார். மோரேவிலிருந்து வெளியேறும்படி காவல்துறை இவர்களை வற்புறுத்த முடியாது என்ற உறுதியையும் அவர் அளித்தார் என்றும் மணியம் தெரிவிக்கிறார்.

"இந்த 7 குடும்பங்கள் மீண்டும் மோரேவுக்கு வந்தன. அந்த அதிகாரி இங்குள்ள கிராம அலுவலருடன் பேசி, இந்தத் தமிழ்க் குடும்பங்களின் உணவு, உறைவிடத்துக்கு ஏற்பாடு செய்தார். மற்ற 5 குடும்பங்களும் பர்மாவுக்குள் நுழைந்தபோது, அவர்களும் பிடிபட்டு இதே காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர் அதிகாரிகளின் உதவியுடன், அவர்களும் இங்கு குடியேறினர்," என்று அவர் கூறுகிறார்.

இந்த 12 தமிழ்க் குடும்பங்கள் மோரேயில் வசிக்கத் தொடங்கியபோது, அவர்கள் தமிழ்நாட்டில் வசிக்கும் உறவினர்களுக்குக் கடிதங்களின் மூலம் தாங்கள் இங்கு மிகவும் நிம்மதியாக வாழ்வதாகவும் இந்தப் பகுதி, பர்மா எல்லைக்கு மிக அருகில் இருப்பதாகவும் தெரிவித்தார்கள்.

"பர்மாவில் இருந்ததைப் போலவே தான் இங்கும் உணவுப் பழக்கங்கள் இருப்பதாகவும் அவர்களும் இங்கு வரலாம் என்றும் அவர்களின் கடிதங்கள் அழைத்தன. இப்படியாக ஒவ்வொரு தமிழ்க் குடும்பமாக இங்கு வரத் தொடங்கியது. நாங்கள் மோரேவின் மிகப்பெரிய குழுவாக மாறினோம். ஒரு காலத்தில், தமிழர்களின் எண்ணிக்கை இங்கு சுமார் 10,000 ஆக உயர்ந்தது," என்று மணியம் நினைவு கூர்கிறார்.

ஆரம்பகால தமிழ் குடும்பங்கள் மோரேயில் ஓர் ஆலமரத்தை வழிபட்டு வந்தன. படிப்படியாக, மற்ற தமிழ்ச் சமூக மக்களும் அந்த மரத்தை வணங்க ஆரம்பித்து அது வளர வளர, அங்கே ஒரு பெரிய கோயில் கட்டப்பட்டது.

**மோரேவில் தமிழர்கள் எதிர்கொண்ட சிக்கல்கள் என்ன?**

1992இல் தொடங்கிய புரட்சியின் போது, நாகா மற்றும் குகி சமூகங்களிடையே இன மோதல்கள் தொடங்கியதும், இங்குள்ள தமிழர்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்டது என்று மணியம் கூறுகிறார். 1995இல் தமிழ் மற்றும் குகி சமூகங்களுக்கு இடையே மோதல்கள் ஏற்பட்டதாகவும், இதன் காரணமாக தமிழர்கள் மோரேவிலிருந்து வெளியேறத் தொடங்கினர் என்றும் அவர் கூறுகிறார். இன்று, தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த சுமார் 3,000 பேர் மோரேவில் வாழ்கின்றனர்.

ஆனால், இத்தனை துன்பங்கள் இருந்தபோதிலும், மோரே மக்கள் அவர்களை வரவேற்றுத் திறந்த மனதுடன் உதவியதாக மணியம் கூறுகிறார். "எங்கள் மொழி, பழக்க வழக்கங்கள், கலாசாரம் அனைத்தும் வேறுபட்டவை. இங்குள்ளவர்கள் எங்களை ஏற்றுக்கொண்டார்கள். அவர்கள் எங்களுக்கு உதவி செய்யாவிட்டால், நாங்கள் இங்கு குடியேறியிருக்க முடியாது," என்கிறார் மணியம்.



மோரேயில் குடியேறிய பிறகு, இங்குள்ள தமிழர்களுக்கு பர்மாவுக்குச் செல்ல பல வாய்ப்புகள் கிடைத்தன. ”எங்கள் சமூகத்தில் பலர் தங்கள் உறவினர்களைப் பார்க்கவோ, கோயிலுக்குச் செல்லவோ அல்லது வியாபாரம் செய்யவோ பர்மாவுக்குச் செல்கிறார்கள். ஆனால் கொவிட் -19 தொற்றுநோய் காரணமாக இப்போது போக்குவரத்து தடைபட்டுள்ளது. மியன்மாரில் இன்றும் 10 லட்சம் தமிழர்களும் 800-க்கும் மேற்பட்ட தென்னிந்திய கோயில்களும் உள்ளன. இங்குள்ள அனைத்துத் தமிழர்களுக்கும் மியன்மாரில் குடும்ப உறவுகள் உள்ளன. இரு தரப்பிலிருந்தும் தமிழ்ச் சமூக மக்கள் ஒருவருக்கொருவர் பார்க்க வருகிறார்கள்."

இங்குள்ள தமிழ் சமூகத்திற்கு உதவும் நோக்கத்தில், மோரே தமிழ்ச் சங்கம் என்ற அமைப்பு ஒன்றும் நடத்தப்படுகிறது. தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவர் கமல் காந்த் நாயுடு, "மோரே வழியாக பர்மாவுக்குச் செல்ல முடியாமல் இங்கேயே குடியேறிய தமிழர்களுக்கு பர்மிய மொழி தெரிந்திருந்தது. எனவே அவர்களால் பர்மாவில் வியாபாரம் செய்ய முடிந்தது. இங்குள்ள உள்ளூர்வாசிகளுக்குக் கூட பர்மிய மொழியறிவு அந்த அளவுக்கு இல்லை. தமிழ்ச் சமூகம் பர்மாவுடன் வணிகத்தை நிறுவி வளர்த்தது. இன்னும் பர்மிய வணிகர்கள் தமிழ் வர்த்தகர்களையே அதிகம் அணுகுவதற்குக் காரணம் அவர்களுக்கு அங்குள்ள மொழி தெரியும் என்பதுதான்," என்று கூறுகிறார்.

**தமிழர்கள், உள்ளூர்வாசிகளுடன் இணக்கமாக வாழ்கிறார்களா?**

பல தசாப்தங்களாக இங்கு வாழ்ந்த தமிழ்ச் சமூகமும் உள்ளூர் மக்களுடன் தன்னை இணைத்துக் கொண்டுள்ளது. தமிழ் மற்றும் உள்ளூர் மக்களிடையே திருமணங்களும் நடந்துள்ளன. தமிழ்ச் சங்கம் மூலமாகவும் இந்தச் சமூகம் உள்ளூர் மக்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. "தமிழ்க் குழந்தைகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட பள்ளியில், இப்போது உள்ளூர்க் குழந்தைகளும் இலவசமாகக் கல்வி கற்கின்றனர். முன்பு தமிழ் மட்டுமே கற்பிக்கப்பட்டது. இப்போது ஆங்கிலமும் கற்பிக்கப்படுகிறது," என்று தெரிவிக்கிறார் நாயுடு.

தமிழ்ச் சங்கத்தின் நோக்கம் தமிழ்ச் சமூகத்திற்கு உதவுவதும் அவர்களுக்கு வசதிகளை வழங்குவதுமாகும். 1969இல் நிறுவப்பட்ட தமிழ்ச் சங்கத்தின் நோக்கங்களில் ஒன்று, அதன் மொழி, பழக்கவழக்கங்கள் மற்றும் கலாசாரத்தைப் பாதுகாப்பது பராமரிப்பதும் ஆகும் என்று நாயுடு கூறுகிறார்.

**மியமாரில் தற்போது நிலவும் சூழல் குறித்துத் தமிழர்கள் கருத்து என்ன?**

மியன்மாரில் நடந்து வரும் வன்முறைகளால் இந்தியாவுக்கு வரும் அகதிகள் குறித்து தமிழ் சமூகம் அனுதாபம் தெரிவிக்கிறது.

"அந்த மக்களும் மனிதர்கள். இப்போது பர்மாவில் இராணுவ ஆட்சி காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்கள் பெரும் சிக்கலில் உள்ளனர். இந்தியா ஒரு ஜனநாயக நாடு. எனவே இந்தியா இந்த மக்களை வரவேற்க வேண்டும். ஆனால், இந்திய அரசாங்கம் இதற்கு மறுப்பு தெரிவித்துள்ளது. நமது நாடு ஒரு ஜனநாயக நாடு. எல்லைக்கு அந்தப் பக்கத்தில் உள்ள மக்களும் மனிதர்கள் என்றும் சிக்கலில் சிக்கியுள்ள மனிதர்கள் என்றும் இந்திய அரசு நினைக்க வேண்டும். நாம் அனைவரும் அந்த மக்களுக்கு உதவ வேண்டும், அவர்களுக்கு உணவு மற்றும் வீட்டு வசதி கிடைக்க வேண்டும். சுகாதார வசதிகளை வழங்க வேண்டும். " என்று மணியம் கூறுகிறார்.

மோரேவில் வசிக்கும் தமிழ் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இனி மியான்மர் செல்ல விரும்பவில்லை. தங்கள் நாட்டில் ஜனநாயகம் இருப்பதாக அவர்கள் கூறுகிறார்கள், இங்கு இந்தியக் குடிமக்களாக இருப்பதற்கான அனைத்து உரிமைகளையும் அவர்கள் பெறுகிறார்கள், எனவே அவர்கள் ஏன் மியான்மருக்கு செல்ல விரும்ப வேண்டும் என்று எண்ணுகிறார்கள்.

**பி.பி.சி. தமிழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திறந்த பொருளாதார கொள்கை விஷமடங்கிய உணவுப் பொருட்கள் இறக்குமதிக்கான அனுமதி

சேகு

திறந்த பொருளாதார கொள்கை நாட்டினுள் விஷப்பதார்த்தம் அடங்கிய உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதிக்கு வித்திட்டிருப்பதாக அகில இலங்கை பாரம்பரிய தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்க ஒருங்கிணைப்பாளர் புத்திக்க டீ சில்வா தெரிவித்தார்.

ஈழநாட்டிற்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதனை தெரிவித்தார். அந்த செவ்வியின் முழுவடிவம் வருமாறு:

**கே:** *அஃப்ளாடாக்சின் என்றால் என்ன? அது ஏன் ஒரு கலப்பட பொருளாக பயன்படுத்தப்படுகின்றது?*

**ப:** தமிழ் - சிங்கள புத்தாண்டு காலத்தில் பல பொருட்களை தேங்காய் எண்ணெயைப் பயன்படுத்தி தயாரிக்கின்றோம். தேங்காய் உற்பத்திக்கு தேங்காய் கொப்பறையை பயன் படுத்துவர். இவ்வாறு உற்பத்தி செய்யும்போது தரம் குறைந்த சில மூலப்பொருட்கள் இருக்கின்றன.

அஃப்ளாடாக்சின் எனப்படுவது பழைய மூலப்பொருட்களில் உருவாகும் பூஞ்சணமாகும். அந்த பூஞ்சணத்தை தேங்காய் எண்ணெயுடன் கலக்கும்போது அந்த பூஞ்சணம் தேங்காய் எண்ணெயுடன் கலக்கின்றது. அது கலக்கும் பட்சத்தில் புற்றுநோயை உருவாக்ககூடிய காரணி உருவாகின்றது.

பழைய மூலப்பொருட்களின் ஊடாகவே இந்த அஃப்ளாடாக்சின் எனப்படும் பதார்த்தம் உருவாகின்றது. பிழையான களஞ்சியப்படுத்தலின் காரணமாகவே இது உருவாகின்றது. அதன் காரணமாக உருவாகும் பங்கஸ் போன்ற காரணியே தேங்காய் எண்ணெயுடன் இவ்வாறாக கலக்கப்படுகின்றது. அவ்வாறே அஃப்ளாடாக்சின் எனப்படும் பதார்த்தம் உருவாகின்றது.

**கே:** *அஃப்ளாடாக்சின் எனப்படும் பதார்த்தத்தை உணவுப்பொருட்களில் கலப்பதற்கான காரணம் என்ன? அதனால் ஏற்படும் நன்மை தீமைகள் என்ன?*

இவ்வருடம் ஜனவரி மாதம் மற்றும் பெப்ரவரி மாத்தில் இலங்கைக்கு 40 ஆயிரம் மெற்றிக்தொன் இறக்குமதி செய்துள்ளனர். இதற்காக அவர்கள் ஆயிரத்து 150 கோடி ரூபாவை பயன்படுத்தியுள்ளனர். உலக சந்தையில் மூன்றாம் மட்டத்தில் உள்ள தரம் குறைந்த எண்ணெய்களையே இறக்குமதி செய்கின்றனர். அதிக இலாபம் உழைக்க வேண்டும் என்பதற்காக குறைந்த தரத்திலானவற்றையே கொண்டு வருகின்றனர்.

வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்படும் தரம் குறைந்த எண்ணெயுடன் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் எண்ணெயும் கலக்கும் போது இவை இரண்டினுள்ளும் உண்மையில் அஃப்ளாடாக்சின் என்ற பதார்த்தம் இருக்கலாம். குறைந்த தரத்திலான எண்ணெயை இங்கு கொண்டுவந்து தூய்மைப்படுத்துவதாக கூறி சந்தைக்கு தரம் குறைந்த உற்பத்தியை விநியோகிக்கின்றனர்.

**கே:** *அஃப்ளாடாக்சின் எனப்படும் பதார்த்தத்தை எண்ணெயில் இருந்து நீக்குவதற்கான முறைமைகள் உள்ளனவா? எவ்வாறு நீக்குவது?*

அஃப்ளாடாக்சசினை வேறுபடுத்தும் முறைமை இலங்கையில் இல்லை. தேங்காய் எண்ணெய் அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளரே இதனை கூறியள்ளார். ஆகவே, அஃப்ளாடாக்சினை எண்ணெயிலிருந்து பிரிக்கவே முடியாது.

**கே:** *இலங்கையில் பாம் எண்ணெய் இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ளதா?*

ஆம். அதனை நிறுத்தவேண்டும் என ஜனாதிபதி கூறியதை கேள்விப்பட்டோம். நாம் 1980களில் பாண் உண்ணவில்லையா? பாம் எண்ணெய் ஊற்றியா அவற்றை உண்டோம். இல்லை. இருப்பினும் பாம் எண்ணெய் இறக்குமதியை தடைசெய்தால் தேங்காய் எண்ணெயின் விலை அதிகரிக்கும் என பல்தேசிய கம்பனிகளின் சகாக்கள் அச்சுறுத்துகின்றனர்.

**கே:** *விஷப்பதார்த்தம் கலக்கப்பட்ட தேங்காய் எண்ணெய் எவ்வளவு காலம் சமூகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது?*

இறக்குமதி வியாபாரம் 40 வருடங்களுக்கு முன்பிருந்து ஆரம்பமாகியுள்ளது. இருப்பினும் அந்த காலத்தில் இவ்வாறு பாரதூரமாக இவை இடம்பெறவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக இடம்பெற்றது. அதுதான் இப்பொழுது எமக்கு வெளிப்படுகின்றது. நாளாந்தம் புற்றுநோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். இது விளையாட்டு இல்லை அல்லவா? இது கொரோனாவையும் விட பாரதூரமான விடயம் அல்லவா? 1987- 51 என்ற அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டு 2016 ஒக்ரோபர் மாதம் அப்போது இருந்த அமைச்சர் வர்த்தமானி அறிவித்தலொன்றை வெளியிட்டார். அதில் கீழ்பகுதியில் ஒருவிடயம் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த காலத்தில் அவருக்கு இருந்த நண்பர்களுக்கு ஏற்ற சில விடயங்கள் போடப்பட்டிருந்தது. அதுதான். ஏதேனு மொரு எண்ணெயில் கலக்க வேண்டிய இரசாயனப் பதார்த்தத்தின் அளவை குறிப்பிட வேண்டும் என்ற விடயம் குறிப்பிடப்பட்டிருந்தது. இவைதான் முழு நாட்டையும் சேதப்படுத்துபவையாகும்.

ஆசிய தேங்காய் எண்ணெய் அமைப்பு எண்ணெயில் எந்த இரசாயன பதார்த்தத்தையும் கலக்க முடியாது என குறிப்பிட்டுள்ளது. ஆனால், தேங்காய் எண்ணெயில் இரசாயன பதார்த்தங்களை கலக்க முடியும் என சட்டம் நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளது.

**கே:** *இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெய் நாட்டிற்கு தேவையா? நாட்டு மக்களுக்குத் தேவையான தேங்காய் எண்ணெயை இங்கு உற்பத்தி செய்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளனவா?*

பாரம்பரிய தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்களுக்கு இந்த ஒரு இலட்சத்து 80 ஆயிரம் மெற்றிக்தொன் தேங்காய் எண்ணெயை உற்பத்தி செய்வதற்கு தேவையான இயந்திரம் - அனுபவம் என்பன உள்ளது. இப்பொழுதும் அந்த வேலையை எம்மால் செய்ய முடியும்.

எம்முடைய தேங்காய்களை பல்தேசிய கம்பனிகள் வெளிநாடுகளுக்கு கொண்டு செல்வதே இப்பொழுது எம்முடைய பிரச்னையாகவுள்ளது. எமது நாட்டின் சிறந்த தேங்காய், தூய தேங்காய் எண்ணெய் வெளி நாட்டிலேயே உள்ளன. வெளிநாட்டவர்களே அதனை உட்கொள்கின்றனர். அவர்கள் எம்மை ஏமாற்றி அல்லவா இருக்கின்றனர். 40 வருடங்களாக எமது நாட்டு மக்களை மனதளவில் பலவீனப்படுத்தியுள்ளனர். அதுவும் கொஞ்சம் கொஞ்சமாக மனதளவில் வீழ்த்தியுள்ளளனர். இது தான் நவீன பயங்கரவாதம்.

**கே:** *விஷப் பதார்த்தம் கலக்கப்பட்ட தேங்காய் எண்ணெயை மீள் ஏற்றுமதி செய்வதன் நோக்கம் என்ன? அரசியல் காரணி உள்ளதா?*

இலங்கையில் பல்தேசிய கம்பனிகளுடன் தொடர்புபட்ட நிறுவனங்கள் தூய தேங்காய் எண்ணெயை உற்பத்தி செய்ததும் அந்த தேங்காய் எண்ணெயை நாட்டிலுள்ள அனைத்து மக்களாலும் கொள்வனவு செய்ய முடியாத நிலைமை காணப்படுகின்றது. நாளாந்த வருமானத்தில் வாழ்க்கையை கொண்டுநடத்துபவர்களால். 1500, 1600 ரூபாய் பணம் செலுத்தி அந்த எண்ணெய்யை கொள்வனவு செய்வதற்கு பையில் பலம் இல்லை. ஏனெனில் எமது நாட்டு மக்களை பலவீனப் படுத்தியுள்ளனர்.

மனதளவில் வறுமைப்படுத்தியுள்ளனர். ஆகவே மக்களால் அதனை கொள்வனவு செய்ய முடியாது. ஆகவே அவர்கள் இதனை வெளிநாட்டிற்கு அனுப்புகின்றனர். அதனால் எமது நாட்டு மக்களுக்கு வழங்க தேங்காய் இல்லாமல் போகின்றது. ஆகவே அங்கு பாவ னைக்குதவாது என வீசும் தேங்காய் எண்ணெய்களை எமக்கு கொண்டு வருகின்றனர்.

**கே:** *இந்த விடயம் தொடர்பில் இது வரையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படாமைக்கு காரணம் என்ன?*

எமக்கு உள்ள பிரச்னையும் அதேதான். மதுபானம், போதைப்பொருள் உட்பட மஞ்சளை கூட தீயிட்டு அழிக்கின்றனர். அவ்வாறு அழித்த நாடு இந்த எண்ணெய் களை மீள் ஏற்றுமதி செய்வதன் நோக்கம் ஏனைய நாட்டு மக்களை கொல்வதா? அதனை மீள் ஏற்றுமதி செய்யாது அழிப்பதற்கான வசதிகள் நாட்டில் உள்ளது.

**கே:** *தேங்காய் எண்ணெய்க்கு தட்டுப்பாடு நாட்டில் உள்ளதா? இந்த நிலைமை எப்பொழுது சாதாரண நிலைக்கு திரும்பும்?*

இது குழம்பிய குட்டையில் மீன்பிடிப்பதை போன்ற கதையாகும். அதேபோன்று, உண்மையில் தேசிய உற்பத்தியில் உருவான பாரம்பரிய தேங்காய் எண்ணெய் சந்தையில்இல்லை. ஏனெனில்எம்மிடம் மூலப்பொருட்கள் இல்லை அல்லவா?

**கே:** *உண்மையில் நாட்டில் தேங்காய் எண்ணெய்க்கு தட்டுப்பாடு காணப்படுகின்றதா?*

இறக்குமதியாளர்கள் குழம்பிய குட்டையில் மீன்பிடிப்பதை போன்று அதிக விலைக்கு விற்கின்றனர். எனக்கு தெரிந்து ஒரு நிறுவனம் மாத்திரம் இதனால் ஒரு கிலோவிற்கு மாத்திரம் 100 ரூபாய் உழைக்கின்றார். மேற்றிக்தொன் 10ஆயிரம் 11ஆயிரம் என விற்கும் போது மாதத்தில் எவ்வளவு இலாபம் உழைப்பர். அவர்கள் இலாபம் உழைப் பதில் பிரச்னை இல்லை. விஷத்தை கொடுத்தல்லவா இலாபம் உழைக்கின்றனர்.

நாம் உற்பத்தி செய்யும் தேங்காய் எண்ணெயை எமது நாட்டு மக்களுக்கு கொடுப்போம். குறைந்த பட்ச இலாப ம் உழைக்கும் சதோச, கூட்டுறவு நிறுவனங்களின் ஊடாக அதனை பொதுமக்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

**40**

2009 03

ஒவ்வொரு கவிதையிலும் உள்ள வெற்றிடத்திற்கு மிகப் பொருத்தமான சொல்லு

விரிகின்றது... மணம் வீசுகின்றது... வாடுகின்றது....இந்த வகையில்

இதழ் ............. விழுகின்றது காரணம் உதிர்ந்து வீழும்

எனவே சரியான விடை 2

02C .இலக்கணத்திற்கு அமைவான சரியான தமிழ் வாக்கியத்தினை தெரிவு செய்தல்.

பிள்ளைகளின் இருக்கும் இடம் கூட்டம்

க்கள் ஆயிரம் மலர்ந்த இடம் ..................... .குளம்

எனவே சரியான விடை 3

2009 07

02C .இலக்கணத்திற்கு அமைவான சரியான தமிழ் வாக்கியத்தினை தெரிவு செய்தல்.

கருத்துள்ளனவாக இருப்பதற்குச் செய்ய வேண்டிய மாற்றத்தைத் தெரிவு செய்வதாயின்

வண்ணத்துப்பூச்சி ரோசா மலரில் நீரைக் குடிக்கின்றது எனபது பிழையா-கும்.தேனைக் குடிக்கவே செல்கின்றது. நீரை என்பதற்குப் பதிலாக "தேன்" என்பதை இடுதல்

.

வண்ணத்துப் பூச்சி என்பதற்குப் பதிலாகப் "குளவி" என்பதை இடுதல் பொருத்தமில்லை.குளவி " விட்டு செல்வது செல்வதில்லை.

ரோசா என்பதற்குப் பதிலாக "தாமரை" என்பதை இடுதல் பொருத்தமில்லை. குாரணம் தாமரை நீரில்லப் "

எனவே சரியான விடை 3

2009 07

02C .இலக்கணத்திற்கு அமைவான சரியான தமிழ் வாக்கியத்தினை தெரிவு செய்தல்.

கருத்துள்ளனவாக இருப்பதற்குச் செய்ய வேண்டிய மாற்றத்தைத் தெரிவு செய்வதாயின்

பிள்ளை வீதியில் பாடம் படிக்கின்றதுபிள்ளை என்பதற்குப் பதிலாக "மகன்" என்பதை இடுதல் தவறாகும்.பிள்ளை எனபது மகன் அல்லது மகள் ஆக இருக்கலாம்.

பாடம் படிக்கின்றது என்பதற்குப் பதிலாக "ஆரம்பிக்கின்றது" என்பதை இடுதல் தவறாகும்.காரணம் பாடம் படிக்கின்றது என்பதை "ஆரம்பிக்கின்றது" என்பது பொருத்தமில்லை.

வீதியில் என்பதற்குப் பதிலாக "அறையில்" என்பதை இடுதல் சரியாகும்.

எனவே சரியான விடை 2

2010 31

வாக்கியம் என்பதன் கருத்து .இலக்கணத்திற்கு அமைவான அரததமுள்ள வசனமாகும்.பின்வரும் இரு வாக்கியங்கள் அரத்தமற்றவை

அங்குமிங்கும் இருந்த ஒரு மரத்தின் கிளை மீது காகம் பார்த்தது.

அங்குமிங்கும் இருந்த காகம் ஒரு மரத்தின் கிளை மீது பார்த்தது.

.இலக்கணத்திற்கு அமைவான அரததமுள்ள வசனமாகும்

ஒரு மரத்தின் கிளை மீது இருந்த காகம் அங்குமிங்கும் பார்த்தது.

எனவே சரியான விடை 2

2012 11

02ஊ .இலக்கணத்திற்கு அமைவான சரியான தமிழ் சொற்களை தெரிவு செய்தல்.

அம்மா காய்கறிகளைக் தொண்டு வருவற்காக சந்தைக்குச்சென்றார்

இதன் பிரகாரம் அம்மா........... சந்தைக்கு சென்றார்

பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்றனர்.

எனவே சரியான விடை 2

2012 12

நல்ல பிள்ளைகள் ஆசிரியரின் வார்த்தைகளைச் செவிமடுக்கின்றனர். பிரசித்தி பெற்ற பாடகர் இனிமையான குரலில் பாட்டுப் பாடினார்.

பிள்ளைகள் செவிமடுக்கின்றனர் எனில் பாடகர் ....... பாடினார்

எனவே சரியான விடை 3

2013 22

செய்தித்தாள், நாவல், கீதம், சிலை, கவிதை பூ என்பவற்றில் பொருந்தாத சொல்லைத் தெரிவு செய்க.

எனவே இவற்றில் செய்தித்தாள், நாவல், கீதம், சிலை, கவிதை

எனவே இவற்றில் ஒன்றுடன் ஒன்று தொடர்பிருக்கிறது. எனவே சரியான விடை 3

**ஆசிரியர் அன்னமையா - 076 056 5786**

# இவ்வருடம் பொருளாதாரத்தை நாம் நிச்சயம் மீட்டெடுப்போம்

## பிரதமர் மஹிந்த திட்டவட்டம்



**கொழும்பு,ஏப்.14**

**கொரோனா வைரஸ் தொற்று நோய் அச்சுறுத்தலால் பாதிக்கப்பட்டுள்ள பொருளாதாரம் இந்த நேரத்தில் புத்துயிர் பெறுவதற்கான அறி குறிகளைக் காட்டத் தொடங்கியுள்ளது. எனவே, இவ்வருடம் முடிவதற்குள் நாம் நிச்சயம் பொருளாதாரத்தை மீட்டெடுப்போம் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.**

*கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.*

*மேலும், இந்த ஆண்டுக்குள் நாட்டின் பொருளாதாரம் சரியான பாதையில் செல்லும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். கொரோனா தொற்று அதிகரித்தபோதும் இலங்கையின் பொருளாதாரம், 2021 ஆம் ஆண்டில் மீட்டெடுக்கப்படும் என உலக வங்கி கூறியுள்ளது.*

*வெளிநாட்டு முதலீடுகள், சுற்றுலாத் துறை மற்றும் பிற பொருளாதார நடவடிக்கைகளை இயல்பாக்குவதன் மூலம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 2021 ஆம் ஆண்டில் 3.4 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*எவ்வாறாயினும், மெதுவான உலகளாவிய மீட்சி, தொடர்ச்சியான வர்த்தகக் கட்டுப்பாடுகள், பொருளாதார வடுக்கள் மற்றும் அதிக கடன் சுமை ஆகியவை தொடர்ந்து வளர்ச்சியைப் பாதிக்கக் கூடும் என்றும் உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது. (எ)*

# 500 மில்லியன் அமெ. டொலர் கடன் சீனா - இலங்கை இடையே ஒப்பந்தம்

*கொழும்பு,ஏப்.14*

*இலங்கை, சீன அபிவிருத்தி வங்கி ஊடாக 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாகப் பெறும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது.*

*இலங்கை அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் பேராசிரியர் பாலித ஹோகன்ன இந்த ஒப்பந்தத்தில் நேற்றுக் கைச்சாத்திட்டுள்ளார்.*

*கொரோனா வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் அந்நியச் செலாவணியை ஊக்குவிக்கும் வகையில் குறித்த கடன் தொகையை பெற்றுக்கொள்ள இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கடன் தொகை தொடர்பிலான ஒப்பந்தம் குறித்து சீனாவிலுள்ள இலங்கைக்கான தூதரம் ஊடக அறிக்கை வெளியிட்டுள்ளது.*

*இந்த ஒப்பந்தம் தொடர்பில் சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் பாலித ஹோகன்ன தெரிவித்தவை வருமாறு:*

*இலங்கையின் பொருளாதாரத்தை புத்தாக்கம் செய்யும் நோக்கில் சீனா அரசாங்கம் இக்கடன் தொகையை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது.*

*இக்கடன்தொகையை பெறுவதன் ஊடாக இலங்கையின் முதலீடுகளை மேற்கொள்ளும் சர்வதேச முதலீட்டாளர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்திக் கொள்ள முடிவதுடன், டொலருடன் ஒப்பிடுகையில் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள முடியும். நெருக்கடியான சூழ்நிலையில் நட்பு நாடு என்ற அடிப்படையில் சீனா இலங்கைக்கு இக்கடன் தொகையை வழங்கவுள்ளது.*

*இரண்டு வாரங்களுக்கு முன்னர் 6 இலட்சம் கொரோனா தடுப்பூசிகள் சீனாவால் இலங்கைக்கு இலவசமாக வழங்கப்பட்டன.*

*சந்தைப்படுத்தல், முதலீடு, சுற்றுலா மற்றும் விளையாட்டு, கல்வி ஆகிய துறைகள் ஊடாக இரு நாடுகளுக்கிடையில் இரு தரப்பு உறவை மேம்படுத்த இலங்கையுடன் தொடர்புகொள்ள தூதுவர் சீனாவுக்கு அழைப்பு விடுத்தார்.*

*கொரோனா வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்த நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் மட்டுப்படுத்தப்பட்ட பின்னர் சீன நாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவதற்கு எதிர்பார்த்துள்ளனர்.*

*சீனாவிலுள்ள இலங்கைக்கான தூதரக காரியாலயத்தில் இலங்கை உற்பத்திகளை சீன நாட்டு சந்தையில் அறிமுகப்படுத்தல், சீன நாட்டு முதலீடுகளை இலங்கையில் துரிதப்படுத்தல், ஆகிய நடவடிக்கைகளுக்கான பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. குறுகிய காலத்தில் இலங்கையின் பொருளாதாரம் மேம்படுத்தப்படும்.*

*இந்த 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் சீனாவால் கடந்த வருடம் வழங்கப்பட்ட ஒரு பில்லியன் அமெரிக்க டொலரின் இரண்டாம் பகுதியாகும். இந்நிதியை பெற்றுக்கொள்வதற்கு சீனாவில் உள்ள இலங்கைத் தூதரகம் உரிய சீன நிறுவனங்களுடன் பேச்சுக்கள் மேற்கொண்டுள்ளது - என்றார். (எ)*

# போலி ஆவணங்கள் தயாரித்து மோசடி சுங்க உதவி அத்தியட்சகர் சிக்கினார்!

*கொழும்பு,ஏப்.14*

*போலி ஆவணங்களைத் தயாரித்த சுங்கத் திணைக்களத்தின் உதவி அத்தியட்சகர் ஒருவர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டார்.*

*இந்தோனேஷியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 23 பாக்கு கொள்கலன்களை இலங்கையில் உற்பத்தி செய்ததாக தெரிவித்து இந்தியாவுக்கு மீள் ஏற்றுமதி செய்ய கணனி மூலம் போலி ஆவணங்களைத் தயாரித்த குற்றச்சாட்டில் இவர் கைது செய்யப்பட்டார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (எ)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் சிமாட்டின்
# சித்திரைப் புத்தாண்டு சிறப்பு தள்ளுபடிகள்

**உங்கள் இல்லங்களில் பொருத்தக்கூடிய அழகிய நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்**




## உங்கள் தொழில் முயற்சிக்குரிய நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்



ஒரு மணித்தியாலத்திற்கு 120 லீற்றர் நீர் சுத்திகரிப்பு இயந்திரம் ரூபா 240,000.00

ஒரு மணித்தியாலத்திற்கு 250 லீற்றர் நீர் சுத்திகரிப்பு இயந்திரம் ரூபா 350,000.00





ஒரு மணித்தியாலத்திற்கு 500 லீற்றர் நீர் சுத்திகரிப்பு இயந்திரம் ரூபா 450,000.00

## உங்கள் குளியல் அறைகள் கல்சியப் பிரச்சனையில் இருந்து விடுபட



ஒரு நாளைக்கு 2000L நீர் சுத்திகரிப்பு இயந்திரம் 110,000/-

ஒரு நாளைக்கு 3000L நீர் சுத்திகரிப்பு இயந்திரம் 130,000/-

**உங்கள் தேவைகளுக்கேற்ப எந்த அளவிலான நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களையும் எம்மால் தயார் செய்து தரப்படும்.**

**YARL SMART**
*Water solution (Pvt) Ltd*
*"Smart Water, Smart Life"*
341, KKS Road, Jaffna | 021 430 0044, 076 666 5267
yarlsmartwater@gmail.com | www.yarlsmartwater.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் கறுப்பினத்தவர் பொலிஸாரால் சுட்டுக் கொலை!

## எதிர்ப்பு போராட்டங்களில் வன்முறை!



நியூயோர்க், ஏப். 14

அமெரிக்காவில் கறுப்பின இளைஞர் ஒருவர் பொலிஸாரால் நேற்று முன்தினம் இரவு சுட்டுக் கொல்லப்பட்டார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நடந்த போராட்டங்களில் பெரும் வன்முறைகள் வெடித்துள்ளன.

கடந்த ஆண்டு மே மாதம் ஜோர்ஜ் பிலொய்ட் என்ற கறுப்பினத்தவர் கொல்லப்பட்ட மின்னசொட்டா மாகாணத்தின் மினியா பொலிஸ் நகரிலேயே இந்தச் சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

ஜோர்ஜ் பிலொய்ட்டின் மரணத்துக்கு நீதி கோரி அமெரிக்காவிலும் - உலகம் முழுவதும் பல போராட்டங்கள் இடம்பெற்றன. இந்நிலையில், மூன்று வாரங்களுக்கு முன்னர் ஜோர்ஜ் பிலொய்ட் கொலை தொடர்பான வழக்கு இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில், அதேநகரில் கறுப்பின இளைஞர் ஒருவர் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. டான் ரைட் என்ற 20 வயது இளைஞரே இவ்வாறு கொல்லப்பட்டார். அவர், போக்குவரத்து விதிகளை மீறினார் என்ற குற்றத்திற்காக பொலிஸார் கைது செய்ய முற்பட்டனர்.

ஆனால், அவர் தான் குற்றம் எதனையும் செய்யவில்லை என்று கூறிவிட்டு காரில் ஏறி செல்ல முயன்றபோதே பொலிஸ் அதிகாரி ஒருவரால் துப்பாக்கியால் சுடப்பட்டார். காயத்துடன் சிறிது தூரம் காரை செலுத்திய இளைஞர் வேறொரு காருடன் மோதி விபத்துக்குள்ளாகி நின்றது. இதையடுத்து அந்தக் காருக்குள் பொலிஸார் பார்த்தபோது, டான் ரைட் இறந்து கிடந்தார்.

அந்தக் காரில் பயணித்த பெண் ஒருவர் காயங்களுடன் கிடந்தார். இருவரையும் மீட்ட பொலிஸார் வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் அறிந்த நூற்றுக்கணக்கான மக்கள் நகர பொலிஸ் தலைமையகத்தின் முன்னால் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

அவர்களை கலைந்து செல்லும்படி பொலிஸார் எச்சரித்தனர். ஆனால், பொலிஸாருக்கு எதிராக கோஷங்களை எழுப்பியவர்கள், கற்களை வீசித் தாக்கினர். இதையடுத்து பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசித் தாக்கினர். அத்துடன் இறப்பர் குண்டுகளாலும் சுட்டனர்.

இதைத் தொடர்ந்து இரு தரப்பினரிடையேயும் வன்முறைகள் வெடித்தன. இதில் பலர் காயமடைந்தனர். நிலைமையை கட்டுப்படுத்த அந்தப் பகுதியில், தேசிய பாதுகாப்பு படைவீரர்கள் குவிக்கப்பட்டுள்ளனர். (ஐ)



## அணு உலை கழிவு நீரை கடலில் திறந்துவிட ஜப்பான் அரசு முடிவு!

ரோக்கியோ, ஏப். 14

10 இலட்சம் தொன் அளவிலான சுத்திகரிக்கப்பட்ட அணு உலை கழிவு நீரை கடலில் திறந்துவிட ஜப்பான் முடிவு செய்துள்ளது. ஆனால், இதற்கு அந்த நாட்டின் இயற்கை ஆர்வலர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

ஜப்பானின் புகுஷிமா அணு உலை இப்போது பயன்பாட்டில் இல்லை. இந்நிலையில் அங்குள்ள அணுக்கழிவுகளை சுத்திகரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. அணுக்கழிவுகள் அகற்றப்பட்ட கழிவுநீரை தற்போது கடலில் திறந்துவிட ஜப்பான் அரசு முடிவு செய்துள்ளது. இதற்கு சர்வதேச அணு சக்தி முகாமை (IAEA) ஒப்புதல் வழங்கியுள்ளது.

இது குறித்து அந்நாட்டின் பிரதமர் யோஷிஹிடே சுகா அமைச்சரவைக் கூட்டத்தில் பேசியபோது,

"அணுக்கழிவுகளை கடலில் வெளியேற்றுவது இன்றியாமையாத பணி. இது ஓரிரு நாளில் முடியக்கூடியது அல்ல. தசம கால பணி. அப்போதுதான் புகுஷிமா அணு உலையை முழுமையாக செயலிழக்கச் செய்ய முடியும். அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்ட பின்னரே கழிவுநீரை அகற்றும் பணி தொடங்கும்", என்றார்.

ஆனால், அவரின் இந்த முடிவுக்கு எதிர்க்கட்சி, இயற்கை ஆர்வலர்கள், கிரீன்பீஸ் தன்னார்வ தொண்டு நிறுவனம் என்பன கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன.

ஜப்பானின் இந்த முடிவுக்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்துள்ளது. (ஐ)

### பிரமாண்ட அணை கட்டும் சீனா:

## பிரமபுத்திரா நதி நீர் இந்தியாவுக்கு கிடைப்பதை தடுக்க சதித் திட்டம்?

புதுடில்லி, ஏப். 14

திபெத்தின் மொசோ மாவட்டத்தில் பிரமாண்டமான அணை ஒன்றைக் கட்ட சீனா முடிவு செய்துள்ளது. சீனா இந்த அணையை கட்டினால் இந்தியாவுக்கு பல்வேறு விதமான பாதிப்புகள் ஏற்படும் என்று ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.


உலகிலேயே மிகவும் நீளமான மற்றும் ஆழமான பள்ளத்தாக்கில் இந்த அணையை சீனா கட்டுகின்றது. கடல் மட்டத்தில் இருந்து சுமார் 4 ஆயிரத்து 900 அடி உயரத்தில் இந்த அணையை கட்ட சீனா திட்டமிட்டுள்ளது.

இதில் சேமிக்கும் நீரைக் கொண்டு 30 ஆயிரம் கோடி கிலோவாட்ஸ் மின்சாரம் தயாரிக்க இலக்கு நிர்ணயித்துள்ளது. சீனாவின் 14 ஆவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள இந்த அணை கட்டுமான பணிக்கு சீன பாராளுமன்றம் ஒப்புதல் வழங்கி உள்ளது.

இந்த ஆண்டு இறுதியில் அணையின் கட்டுமானப் பணி தொடங்கப்பட இருக்கிறது.

சீனா இந்த அணையை கட்டினால் இந்தியாவுக்கு பல்வேறு பாதிப்புகள் ஏற்படும் என்று ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர். இமயமலையில் உருவாகும் பிரமபுத்ரா நதி திபெத்தில் உற்பத்தியாகி இந்தியா, பங்களாதேஷ் வழியாக செல்கிறது.

இது ஆசியாவின் வற்றாத ஜீவநதிகளில் ஒன்று. இந்த நதியின் குறுக்கே தான் சீனா கட்டும் பிரமாண்ட அணை அமைகிறது. இதனால், பிரமபுத்ரா நதி இந்தியாவுக்குள் பாய்வது தடுக்கப்படும். இது இந்தியாவுக்கு பேரிழப்பாக அமையும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. (ஐ)




■ Under construction ■ Approved in the 12th Five-year Plan (2011-15)

## சமூகவலைதள போராளிகளும் மியன்மாரில் சுட்டுக் கொலை!




யங்கூன், ஏப். 14

மியன்மாரில் இராணுவ ஆட்சிக்கு எதிராகவும் - ஜனநாயகத்தை வலியுறுத்தியும் சமூக வலைத்தளத்தில் குரல் கொடுப்போரையும் படைகள் இலக்கு வைத்துள்ளன. இதுவரை, 14 வயது சிறுமியான பான் இய் பயு உள்ளிட்ட மூவர் மூவர் இராணுவத்தினரால் கொல்லப்பட்டனர். இவர்கள் கொல்லப்பட்டபோது அவர்கள் போராட்ட களத்தில் இருக்கவில்லை வீடு அல்லது வேறு இடங்களிலேயே இருந்தனர் என்று பி.பி.சி.க்கு அவர்களின் உறவினர்கள் அளித்த தகவலில் தெரிவித் துள்ளனர்.

இவ்வாறு இறந்தவர்களில், ரிக் ரோக் வலைத்தளத்தில், பான் இய் பயு என்ற 14 வயது சிறுமி யும் அடங்குவார். அவர் ஜன நாயக சார்பு பாடல்களை பாடி பதிவுகளை இட்டிருந்தார். இவரின் பாதுகாப்பு குறித்து அச்சமடைந்த அவரின் தாயார் போராட்டக்களங்களுக்கு மகளை அனுப்பவில்லை.

ஆனால், கடந்த மார்ச் 27 அன்று 114 போராட்டக்காரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதில் 11 சிறுவர்களும் அடங்குவர். இதில் பயுவும் ஒருவர். அவர் போராட்டக்காரர்களுக்கு அடைக்கலம் கொடுப்பதற்காக வீட்டின் கதவை திறந்தபோது இராணுவத்தினர் சுட்டனர். இதில் முதுகில் குண்டுபட்டு அவர் மரணமானார்.

பய்பு தவிர, ஷின் மின் ஹ்ரெட், ஹெய்ன் ஹ்ரட் ஆங் என்ற இளைஞர்களும் கொல்லப்பட்டனர். இவர்களும் சமூக வலைத்தளத்தில் ஜனநாயக ஆதரவு கருத்துக்களை பகிர்ந்தவர்கள், இவர்கள் போராட்ட களங்களில் இல்லாத நேரத்திலேயே கொல்லப்பட்டனர் என்று அவர்களின் உறவினர்கள் பி.பி.சிக்கு தெரிவித்துள்ளனர்.



## தாய்வான் வான் பரப்பில் சீன விமானங்கள்

தைபே, ஏப். 14

சீனாவின் 26 போர் விமானங்கள் தனது வான் பரப்புக்குள் அத்துமீறிப் பறந்தன என்று தாய்வான் குற்றஞ்சாட்டியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை தனது வான் பரப்புக்குள் நுழைந்த இந்த விமானங்களில் அணு குண்டு வீசித் தாக்கவல்லவையும் இருந்தன என்று தாய்வான் தெரிவித்துள்ளது.

கடந்த, ஒரு வருடத்தில் இது மிகப்பெரிய சீன ஆக்கிரமிப்பு ஊடுருவல் என்று அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்தப் போர் விமானங்களில் 18 போர் விமானங்கள், 4 குண்டு வீச்சு விமானங்கள், 2 அணு குண்டு வீசித் தாக்கவல்ல விமானங்கள், 2 நீர்மூழ்கி கப்பல் எதிர்ப்பு விமானங்கள் என பனவே தனது வான்பரப்புக்குள் நுழைந்தன என்று தாய்வான் கூறியுள்ளது.


தாய்வானை சீனா பிரிந்து போன தனது மாநிலமாகக் கருதுகிறது. ஆனால், தாய்வான் இறையாண்மை மிக்க தனி நாடாக தன்னைக் கருதுகிறது. இதனால், இரு நாடுகளுக்கும் இடையே முரண்பாடான சூழல் நிலவுகின்றது. இந் நிலைமை அண்மைக்காலமாக மிக உச்சமாகி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் - சிங்கள புத்தாண்டு வாழ்த்துச் செய்திகள்

## மேன்மை, நீதி எண்ணங்களுடன் புத்தாண்டை கொண்டாடுவோம்!

### ஜனாதிபதி புத்தாண்டு வாழ்த்து



கொழும்பு, ஏப். 14

"நாட்டின் அனைத்து குடிமக்களும் எவ்வித பாகுபாடுகளும் இல்லாமல் தமிழ் - சிங்கள புத்தாண்டு கொண்டாட்டங்களில் மேன்மை மற்றும் நீதியான எண்ணங்களுடன் சேர்வார்கள் என்பது எனது நம்பிக்கையும் - எதிர்பார்ப்பும்." என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது புத்தாண்டு வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அனுப்பி வைத்த புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில், "தமிழ் - சிங்கள புத்தாண்டின் விடியலை புதிய நம்பிக்கையுடனும் புதிய உறுதியுடனும் வரவேற்பது நமது கலாசாரத்தின் மதிப்புமிக்க பாரம்பரியம். மோசமான சுகாதார நிலைமைகள் கடந்த ஆண்டு, கொண்டாட்டத்தை தடுத்திருந்தது. இந்த ஆண்டு நாம் அனைவரும் சேர்ந்து புத்தாண்டை கொண்டாட முடிகிறது. எமது பழக்க வழக்கங்களையும் ஆரோக்கியத்தையும் நாம் முறையாக கடைப்பிடிப்போம்.

தமிழ் - சிங்கள புத்தாண்டு எங்கள் முதன்மையான கலாசார விழா. குடிமக்கள் அனைவரும் ஒரே நேரத்தில் புனித சடங்குகளை செய்வதன் விளைவால், வரும் ஆண்டு செழிப்பு நிறைந்ததாக இருக்கும் என்ற வலுவான நம்பிக்கை உள்ளது.

வாழ்க்கையில் சிக்கல்களுடன் போராடும் பெரியவர்கள் மனக்கசப்பு, பகைமைகளை மறந்து ஒருவருக்கு ஒருவர் சமாதானம் ஆகின்றனர். இதேபோல், எவ்வித பாகுபாடும் இல்லாமல் புத்தாண்டு கொண்டாட்டங்களில் மேன்மையான - நீதியான எண்ணங்களுடன் சேருவார்கள் என்பது எனது நம்பிக்கை. அனைவருக்கும் மகிழ்ச்சி - நல்ல ஆரோக்கியம் - செழிப்பை தரட்டும் - என்றுள்ளது. (ஐ)

## புதிய மனநிலை, அபிலாஷையுடன் வளமான நாட்டை உருவாக்குவோம்

### பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்து



கொழும்பு, ஏப். 14

தமிழ் - சிங்கள புத்தாண்டில் அனைத்து சவால்களையும் புதிய மனநிலை - புதிய அபிலாஷைகளுடன் எதிர்கொண்டு ஒரு வளமான நாட்டை நோக்கி புதிய பாதையில் இறங்க வேண்டிய நேரம் இது என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவர் அனுப்பி வைத்த புத்தாண்டு செய்தியில், அனைத்து இலங்கையர்களின் புதிய நம்பிக்கையை பூர்த்தி செய்யும் தமிழ் - சிங்கள புத்தாண்டு பிறப்பை நான் மிகவும் மகிழ்ச்சியுடன் வாழ்த்துகிறேன். நாட்டின் இந்த கலாசார கொண்டாட்டத்தை பழக்கவழக்கங்கள் - மரபுகளுக்கு முன்னுரிமை அளித்து பழங்காலம் தொட்டே கொண்டாடி வருகிறோம்.


தமிழ் - சிங்கள புத்தாண்டு இணைக்கப்பட்ட பழக்க வழக்கங்கள் மற்றும் சடங்குகள் மனித குலத்திற்கும் இயற்கைக்கும் உள்ள தொடர்பை வெளிப்படுத்துகின்றன.

ஒழுக்கமான தேசமாக - அரசாங்கத்தின் வழிகாட்டுதல்களை எண்ணற்ற தியாகங்களுடன் மக்கள் பின்பற்றினர். எனவேதான், இந்தப் புத்தாண்டை சுதந்திரமாக கொண்டாட வாய்ப்பு கிடைத்துள்ளது. எனவே, சுகாதார நடைமுறைகளை மனதில் கொண்டு நமது கலாசார விழுமியங்களை பாதுகாப்பது நம் அனைவரின் பொறுப்பாகும்.

புத்தாண்டு பிறப்பில் ஒருவருக்கு ஒருவர் நம் உறவை வலுப்படுத்தி - இலங்கை தேசமாக உலகின் முன்னணியில் உயர நாம் அனைவரும் சிந்திப்போம். அனைவருக்கும் அமைதியான - வளமான புத்தாண்டு அமையட்டும் - என்றுள்ளது. (ஐ)

## முன்னோர் காட்டிய வழியில் புத்தாண்டை பின்பற்றுவோம்

### பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன்



யாழ்ப்பாணம், ஏப். 14

புத்தாண்டு போன்ற விசேட நாட்களில் எமது முன்னோர்கள் ஆலய வழிபாட்டில் ஈடுபட்டு பணிகளை தொடங்கினர். ஆலய வழிபாட்டால் அவர்கள் அமைதி, சுபீட்சமான வாழ்வு வாழ்ந்தனர். நாமும் அவர்கள் வழியை பின்பற்றி புத்தாண்டை கொண்டாடுவோம் என்று யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன் தனது புதுவருட வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று அவர் அனுப்பி வைத்த வாழ்த்துச் செய்தியில் மேலும் கூறியவை வருமாறு:

இன்று புதன்கிழமை வாக்கிய பஞ்சாங்கப்படி அதிகாலை 01 மணி 39 நிமிடங்களில் பூர்வபக்கத் துதியைத் திதியில் பரணி நட்சத்திரம் 2ஆம் பாகத்தில் பிறக்கின்ற பிலவ வருடம் அனைத்து மக்களுக்கும் சுபீட்சத்தையும் அமைதியையும் நல்க வேண்டும் என இறைவனை முதலில் இறைஞ்சுகின்றேன்.

எமது முன்னோர்கள் தைத் திருநாள், சித்திரை வருடப் பிறப்பு, தீபாவளித் திருநாள் மற்றும் விசேட தினங்கள் அனைத்திலும் காலை எழுந்து ஸ்நானம் செய்து தூய ஆடை அணிந்து ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுகளை இயற்றிய பின்னரே தமது நாளாந்தக் கடமைகளுக்கு செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். அதிலும் விசேடமாக ஆலய வழிபாடுகளை தமக்கு மட்டுமே உரித்தானதாகக் கொள்ளாமல் அனைத்து மக்களுக்கும் சுபீட்சம் உண்டாக வேண்டும் என பிரார்த்திக்கின்ற வழக்கத்தையும் கொண்டிருந்தனர். அதனால், அவர்களது வாழ்வு அமைதியும் சுபீட்சமும் அமைந்ததாக அமைந்தது. அவர்கள் பெரு வாழ்வு வாழ்ந்தார்கள்.

இன்று ஆலயம் தொழக் கூட நேரமற்ற நிலையில் நாம் பறந்து கொண்டிருக்கின்றோம். அதன் விளைவாக அமைதியற்ற மனநிலை, நோய் நொடிகள் விரைவாகப் பற்றிப் பிடிக்கின்ற தன்மை போன்றவை மேலோங்கியுள்ளன. எனவே கிடைப்பதை வைத்து சிறப்பாக வாழப் பழகிக் கொண்டு இந்த இனிய புதிய வருடத்தில் நாம் அனைவரும் இறை பக்திமிக்கவர்களாக அமைதியான வாழ்க்கை முறையை பின்பற்றுபவர்களாக வாழப் பழகிக் கொள்வோம். அதற்கு சூழல் இடம் கொடுக்க வேண்டும். இறைவன்தான் அதை நல்க வேண்டும்.

பொருட்களின் விலைகளின் ஏற்றம் மலைப்பைத் தருகின்றது. நாம் அனைவரும் முடியுமான அளவுக்கு வீட்டுத் தோட்டங்களை உருவாக்க இவ்வருடத்தில் முனைவோமாக! அனைவருக்கும் சுக ஆரோக்கியமும் நீண்ட ஆயுளும் கிட்ட பிரார்த்திக்கிறேன் - என்றுள்ளது. (ஐ)

## சுபீட்சம், ஆரோக்கியமான வாழ்வு சகல மக்களுக்கும் கிடைக்கட்டும்!

### வடக்கு ஆளுநர் புதுவருடச் செய்தி



யாழ்ப்பாணம், ஏப். 14

பிறக்கும் தமிழ் - சிங்கள புத்தாண்டில் அனைத்து மக்களுக்கும் சுபீட்சம், ஆரோக்கியமான வாழ்வு கிடைக்கட்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

அவர் அனுப்பி வைத்துள்ள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில்,

"பிறக்கவிருக்கும் தமிழ் - சிங்கள புத்தாண்டு நாட்டின் அனைத்து மக்களுக்கும் வளமான சுபீட்சத்தையும், ஆரோக்கியமான வாழ்வையும் , மகிழ்ச்சியான சூழலையும் ஏற்படுத்த வேண்டும் என்று வாழ்த்துவதோடு அனைவரதும் புத்தாண்டுப் பிரார்த்தனைகளில் நானும் இணைந்து கொள்கிறேன்.

இந்தப் புத்தாண்டை ஒன்றுபட்டு கொண்டாடும் இலங்கை மக்கள் அனைவரும் கொவிட்-19 மட்டுமின்றி அனைத்துவித அசௌகரியங்களையும், அநீதிகளையும் களைவதற்கு ஒன்றுபட்டு நின்று, இலங்கை தீவை ஒரு சிறந்த நாடாக மாற்றும் திடசங்கற்பத்தை இந்த பெருநாளில் மேற்கொள்வோம் என்று வேண்டி, எனது இனிய வாழ்த்துக்களையும், ஆசிகளையும் தெரிவித்து கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.", என்றுள்ளது. (ஐ)

## சுகாதார பாதுகாப்பை அனுசரித்து புத்தாண்டைக் கொண்டாடுவோம்!

### யாழ். மாவட்ட அரச அதிபர் வாழ்த்து



யாழ்ப்பாணம், ஏப். 14

சகல பொது மக்களும் சுகாதார வழிகாட்டல்களுக்கு இணங்கி சமூகப் பாதுகாப்புக்கு ஒத்துழைப்பு வழங்கி புத்தாண்டை கொண்டாட வேண்டும் என்று யாழ். மாவட்ட அரச அதிபர் க. மகேசன் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் கேட்டுள்ளார்.

அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில்,

"பிலவ வருட தமிழ் புத்தாண்டை கொண்டாடும் சகல மக்களுக்கும் இந்தப் புத்தாண்டு நல்ல ஆரோக்கியத்தையும், சுபீட்சத்தையும், மற்றும் சௌபாக்கியங்களையும் வழங்கி மகிழ்ச்சிகரமான வாழ்க்கைக்கு வழியேற்படுத்த எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்தித்து நல்வாழ்த்துகளை தெரிவிக்கிறேன்.

அத்துடன், கொவிட்-19 தொற்றுச் சூழ்நிலையில் சகல பொதுமக்களும் அவசியமற்ற நடமாட்டங்களையும் ஒன்றுகூடல்களையும் தவிர்த்து, சுகாதார வழிகாட்டல்களுக்கு இணங்க சமூக இடைவெளி பேணி முகக் கவசம் அணிந்து தங்களின் குடும்ப உறவுகளையும் பாதுகாப்பதன் ஊடாக தொற்றிலிருந்து சமூகத்தை பாதுகாக்க மேலான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன் - என்றுள்ளது. (ஐ)

## சுபீட்சமான இன்ப வாழ்வு உலகினருக்கு கிட்டட்டும்!

### இந்து குருமார் அமைப்பு வாழ்த்து செய்தி!



கொழும்பு, ஏப். 14

சுபீட்சமான - இன்ப மயமான வாழ்வு எமது மக்களுக்கும் - உலக மக்களுக்கும் - விலங்கு இனங்களுக்கும் கிடைக்கட்டும் என்று இந்துக் குருமார் ஒன்றியம் தனது புதுவருட வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளது.

இந்துக் குருமார் அமைப்பு சார்பில் அதன் தலைவர் கலாநிதி. சிவஸ்ரீ. கு.வை. க. வைத்தீஸ்வர குருக்கள் அனுப்பி வைத்த வாழ்த்துச் செய்தியில்,

"இன்று தமிழ் வருடங்களில் 35ஆவது வருடமாக பிலவ எனும் மங்கல நாமத்துடன் புதிய வருடம் உதயமாகிறது. வாக்கிய பஞ்சாங்க பிரகாரம் அதிகாலை 01.39 மணிக்கும் திருக்கணிதபிரகாரம் அதிகாலை 02.31 கும் பிறக்கிறது.

இன்றைய காலகட்டத்தில் எமது மக்கள் மட்டுமல்லாது உலக அளவில் மக்கள் அனைவருமே பல்வேறு இன்னல்களுக்கும் துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் உட்பட்டு வாழ்ந்த வருடமாக சென்ற வருடம் அமைந்திருந்தது மிகவும் வேதனையான விடயம். ஆகவே, பிறக்கின்ற இந்த வருடம் அனைவருக்கும் நல்லதாக அமையவேண்டும். தேகாரோக்கியம் அனைவருக்கும் கிடைக்க வேண்டும்.

மனித சமூகத்திற்கு நன்மை உண்டாக வேண்டும். இவ்வாறான விடயங்களை மனதில் நிறுத்தி, மங்கலகரமாக பிறக்கும் பிலவ வருடத்தில் உரிய காலத்தில் மழை வீழ்ச்சி வேண்டும், உரியவாறு தானிய விருத்தி அமைய வேண்டும், கோமாதா, விலங்கினங்கள் நோயற்று வாழவேண்டும், எமது மக்கள் மட்டுமல்லாது உலக மக்கள் அனைவரும் இன்பகரமாக இன்புற்று சுபீட்சமாக வாழ்ந்திட வேண்டும் என்று மனதார, அன்பே உருவான பரம்பொருளை வேண்டி பிரார்த்தனை செய்து மனமார்ந்த நிறைந்த நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவிக்கின்றோம் - என்றுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டுக்கு பின்னர் புதிய கொத்தணிகள்!

## சுதத் சமரவீர எச்சரிக்கை



**கொழும்பு,ஏப்.14**

**சித்திரைப் புத்தாண்டுக்குப் பின்னர் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் இதன் மூலம் புதிய கொத்தணிகள் உருவாகும் வாய்ப்புள்ளது. இருப்பினும், இதனை மூன்றாவது அலையின் தோற்றமாகக் கருத முடியாது என தலைமை தொற்றுநோயியல் நிபுணர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.**

கடந்த ஆண்டு டிசெம்பரில் கிறிஸ்மஸ் பண்டிகைக்குப் பின்னர் கொரோனா தொற்று அதிகரித்தமையை சுட்டிக்காட்டிய அவர், அது மற்றொரு அலையின் அவசரநிலை எனக் கருத முடியாது என்றும் கூறினார்.

கிறிஸ்மஸ் காலத்தில் அதிகரித்த பொது மக்கள் நடமாட்டம் பல புதிய கொத்தணிகள் உருவாக காரணமாக அமைந்தது எனக் குறிப்பிட்ட மருத்துவர் சுதத் சமரவீர, புதுவருடப்பிறப்புக்குப் பின்னர் இந்நிலையை எதிர்பார்க்கலாம் என்றும் குறிப்பிட்டார்.

மேலும், யாழ்ப்பாணம் மாவட்டத்திலிருந்து அதிகளவில் தொற்றாளர்கள் பதிவாகியிருப்பதே ஒரு நாளைக்கு 200 இற்கும் மேற்பட்ட நோயாளிகள் அடையாளம் காணப்பட காரணம் என்றும் குறிப்பிட்டார்.

இவர்களில் சமூக அளவில் அடையாளம் காணப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை குறைவு எனக் குறிப்பிட்ட மருத்துவர் சுதத் சமரவீர, தனிமைப்படுத்தப்பட்டவர்கள் மூலமே தொற்று கண்டறியப்பட்டதாகவும் குறிப்பிட்டார். (எ)



# ஹற்றனில் விபத்து: இளம் குடும்பஸ்தர் பலி!

## பெண் காயம்

ஹற்றன்,ஏப்.14

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இளம் குடும்பஸ்தர் உயிரிழந்ததுடன், ஒருவர் காயமடைந்துள்ளார்.

குறித்த விபத்தில் உயிரிழந்தவர் நோர்வூட் பகுதியைச் சேர்ந்த 28 வயது குபேரன் கருணாகரன் என அடையாளம் காணப்பட்டார்.

ஹற்றன் - விக்டன் பகுதியிலிருந்து ஹற்றன் நகரை நோக்கி சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து அதே பக்கத்தில் நடந்து சென்ற குறித்த இளம் குடும்பஸ்தர் மீது மோதியது.

குறித்த நபர் வீதியில் சென்ற பெண் மீது வீழ்ந்து, நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோவில் மோதுண்டு மீண்டும் வீதியின் பக்கம் வீழ்ந்ததாகவும் சம்பவத்தை நேரில் கண்டோர் தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து பேருந்தின் சாரதி, பேருந்தை நடு வீதியில் நிறுத்திவிட்டு பொலிஸ் நிலையத்துக்குச் சென்றுள்ளார்.

இதனால் குறித்த பகுதியில் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த இருவரையும் வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற நிலையில், ஆண் உயிரிழந்ததாகவும் பெண் காயமடைந்த நிலையில், டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் சாரதி கைது செய்யப்பட்டதுடன், பொலிஸார் பேருந்தினையும் தடுத்து வைத்துள்ளனர்.(எ)

# உயர்தர பரீட்சை பெறுபேறுகள் இரு வாரத்துக்குள் வெளியாகும்

## கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு,ஏப்.14

2020 ஒக்ரோபரில் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் எதிர்வரும் இரு வாரங்களுக்குள் வெளியிடப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

2020 ஒகஸ்ட் மாதம் நடைபெற்றிருக்க வேண்டிய உயர்தரப் பரீட்சைகள் கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக நவம்பர் மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டது.

இதற்கமைய உயர்தரப் பரீட்சைகள் 2020 ஒக்ரோபர் 12 ஆம் திகதி ஆரம்பமாகி நவம்பர் 6 ஆம் திகதி நிறைவடைந்தது.

3 இலட்சத்து 62 ஆயிரத்து 824 மாணவர்கள் கடந்த ஆண்டு பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

இந்நிலையிலேயே உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை இம்மாத இறுதியில் அதாவது எதிர்வரும் இரு வாரங்களுக்குள் வெளியிட எதிர்பார்த்துள்ளதாக கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இவ்வாண்டு மார்ச் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை பெறுபேறுகளை எதிர்வரும் ஜூன் மாதம் வெளியிட எதிர்பார்த்துள்ளதாகவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகிய பின்னர் அம் மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக்கொள்ளும் செயல்பாடுகள் துரிதமாக ஆரம்பிக்கப்படும் அதேவேளை, ஜூன் மாதம் சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியானதன் பின்னர் அம்மாணவர்கள் ஜூலை மாதம் முதல் உயர்தர கல்வியை ஆரம்பிக்க முடியும் என்றும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இவ்வாண்டுக்கான உயர்தரப் பரீட்சை, புலமைப்பரிசில் பரீட்சை என்பன ஒக்ரோபர் மாதம் வரையும், சாதாரண தரப் பரீட்சைகள் 2021 ஜனவரி வரையும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (எ)

# கார் கதவில் சகாக்கள் சாரதிக்கு விளக்கமறியல்

## மேலும் நால்வர் கைது

கொழும்பு,ஏப்.14

அதிவேக நெடுஞ்சாலையில் கார் கதவில் சகாக்களை ஏற்றிச் சென்ற சாரதி எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அத்துடன், குறித்த காரில் பயணித்த அக்குரணை பகுதியைச் சேர்ந்த நால்வர் நேற்றுக் காலை கைதுசெய்யப்பட்டனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

அதிவேக நெடுஞ்சாலையில் கடந்த சனிக்கிழமை அதிகாலை பாதுகாப்பற்ற முறையில் கார் ஒன்று பயணிக்கும் காணொலி சமூகவலைத்தளத்தில் பதிவேற்றப்பட்டிருந்தது. இதன்போது காரில் பயணித்த நால்வர் கார் கதவில் அமர்ந்து செல்வதும் பதிவாகியிருந்தது. இந்த விடயம் தொடர்பில் அதிவேக நெடுஞ்சாலை பாதுகாப்பு பொலிஸ் பிரிவினர் விஷேட விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதற்கமைய சம்பந்தப்பட்ட காரை செலுத்திய சாரதி கைது செய்யப்பட்டார். சந்தேக நபர் பாணந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார், இதன்போது நீதிவான் அவரை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இந்நிலையில் காரின் ஆரம்ப உரிமையாளர் மற்றும் அதை அவரிடமிருந்து, பெற்றுக் கொண்ட நபர் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், அவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதன்போது கார் கதவில் அமர்ந்து சென்ற அக்குரணையைச் சேர்ந்த மேலும் நால்வரை கைதுசெய்துள்ளதாகவும் அவர்களிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (எ)

# இலங்கையில் 11 பயங்கரவாத குழுக்கள் தடை தமிழகத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை!

சென்னை,ஏப்.14

இலங்கையில் தீவிரவாதச் செயல்பாடுகளுக்கான தடைகளை தொடர்ந்து சர்வதேச வருகை மற்றும் தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களிலுள்ள விமான நிலையங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.




அல்கொய்தா மற்றும் ஐ.எஸ். உட்பட 11 பயங்கரவாதக் குழுக்களைத் தடை செய்யும் நடவடிக்கையை இலங்கை அரசாங்கம் ஆரம்பித்த நிலையில் இந்த அச்சுறுத்தல் உணரப்பட்டுள்ளது என த இந்து செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும், குறித்த தடையை அடுத்து ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் தொடர்பில் அனைத்து மாநில ஆணையர்கள் மற்றும் பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


இலங்கையிலிருந்து மத அடிப்படைவாதிகள் விமானம் அல்லது கடல் வழியாக சட்டவிரோதமாக நுழைவதற்கு உள்ள வாய்ப்புக்கள் குறித்தும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில், மத அடிப்படைவாதிகள் தமிழ்நாட்டில் தளம் அமைப்பதைத் தடுக்க உளவுத்துறையைப் பலப்படுத்தவும் மாநிலம் முழுவதும் கண்காணிப்பை தீவிரப்படுத்தவும் பொலிஸாருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில், அண்மையில் தீவிரவாத நடவடிக்கைகள் தொடர்பில் அல்கொய்தா, ஐ.எஸ். உள்ளிட்ட 11 குழுக்களை தடை செய்ய சட்டமா அதிபர் அங்கீகாரம் வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu




## ரெய்னாவின் சுயசரிதை நூல்!

சென்னை, ஏப். 14

இந்திய கிரிக்கெட் வீரர் சுரேஷ் ரெய்னா சுயசரிதை நூலை எழுதியுள்ளார். அதற்கு Believe (நம்பு) என்று பெயரிட்டுள்ளார்.

34 வயதான ரெய்னா இந்திய கிரிக்கெட் அணிக்காக 18 டெஸ்ட், 226 ஒருநாள், 78 இருபது - 20 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

தற்போது, ஐ.பி.எல். இருபது - 20 போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக விளையடி வருகிறார் ரெய்னா.

இந்நிலையில், அவரின் சுயசரிதை நூலை பரத் சுந்தரேசன் என்பவர் எழுதியுள்ளார். இந்த நூல் எதிர்வரும் மே 12ஆம் திகதி வெளியாகின்றது. (ஐ)

## கேன் வில்லியம்ஸனுக்கு நியூஸிலாந்து உயர் விருது



வெலிங்டன், ஏப். 14

நியூஸிலாந்து கிரிக்கெட் வீரர்களுக்கு வழங்கும் 'சேர் றிச்சர்ட் ஹேட்லி' என்ற உயரிய விருதை கடந்த 6 ஆண்டுகளில் நான்காவது முறையாக வென்றுள்ளார் கேன் வில்லியம்ஸன்.

நியூஸிலாந்து கிரிக்கெட் சபை சிறப்பாக விளையாடும் வீரர்களுக்கு வருடாந்தம் விருது வழங்கிக் கௌரவித்து வருகின்றது. 2020 -21ஆம் ஆண்டுக்கான விருதுக்கு வீரர்கள் தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில், நியூஸிலாந்து அணியின் தலைவர் கேன் வில்லியம்ஸன் சேர் றிச்சர்ட் ஹேட்லி விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். கடந்த 6 ஆண்டுகளில் நான்காவது முறையாக இந்த விருதுக்கு அவர் தெரிவாகியுள்ளார்.

பந்துவீச்சாளர்களுக்கு சாதகமான நியூஸிலாந்து ஆடுகளங்களில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான போட்டியில் 251 ஓட்டங்களையும், பாகிஸ்தானுக்கு எதிரான ஒரு போட்டியில் இரட்டை சதத்தையும் அடித்தமைக்காகவே வில்லியம்ஸனுக்கு இந்த விருது வழங்கப்படுகின்றது.

இதேவேளை, ஒருநாள், இருபது - 20 கிரிக்கெட்டின் சிறந்த வீரராக டெவன் கொன்வே தெரிவாகியுள்ளார்.

கொன்வே, இந்தப் பருவ காலத்தில் இருபது - 20 போட்டிகளில் 473 ஓட்டஙகளை 59 என்ற சராசரியுடன் பெற்றுள்ளார். அத்துடன், 3 ஒருநாள் போட்டிகளில் 225 ஓட்டங்களை பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஐ.பி.எல். இருபது - 20 போட்டி:

# இரண்டாவது வெற்றியை பதிவு செய்தது மும்பை!

சென்னை, ஏப். 14

கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணியை 10 ஓட்டங்களால் வெற்றி கொண்டு இரண்டாவது வெற்றியைப் பதிவு செய்தது மும்பை இந்தியன்ஸ் அணி.

ஐ.பி.எல். இருபது -20 தொடரில் நேற்று நடந்த ஐந்தாவது போட்டியில் மும்பை இந்தியன்ஸ், கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணிகள் மோதின.

சென்னையில் நடந்த இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கொல்கத்தாவின் அணித் தலைவர் இயன் மோர்கன் களத்தடுப்பைத் தெரிவு செய்தார்.

இதனால், முதலில் துடுப்பெடுத்தாடியது மும்பை அணி. இந்தப் போட்டியில் லின்னுக்குப் பதிலாக குயின்ரன் டி கொக் களமிறங்கினார். ரோஹித சர்மாவுடன் தொடக்க வீரராக களமிறங்கிய கொக் நிலைக்கவில்லை. வருணின் பந்துவீச்சில் திரிபாதியிடம் பிடி கொடுத்து 2 ஓட்டங்களுடன் அவர் ஆட்டமிழந்தார்.

இரண்டாவது விக்கெட்டுக்காக ரோஹித்துடன் இணைந்த சூரியகுமார் யாதவ் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். 33 பந்துகளில் 6 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் அரைச்சதத்தை எட்டினார் யாதவ். மேலதிகமாக ஒரு பௌண்ட்ரி அடித்த யாதவ், சகீப் அல்ஹசன் வீசிய பந்தை லோங் ஓன் திசையில் உயர்த்தினார். அதனை சப்மன் கில் இலகுவாகப் பிடியெடுக்க சூரியகுமார் யாதவ் 56 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

அவரைத் தொடர்ந்து நிதானித்து ஆடிய ரோஹித் சர்மா 3 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 43 ஓட்டங்களுடன் வெளியேறினார். அவர் கம்மின்ஸின் பந்தில் 'போல்ட்' ஆகினார்.


பின்னர் வந்தவர்கள் அந்ரே ரஷலின் வேகத்திற்கு தாக்குப் பிடிக்க முடியாமல், கிரன் பொலார்ட் 5, குர்னல் பாண்ட்யா 15, மக்ரோ ஜன்சென் 0, ராகுல் சாகர் 8, ஜஸ்பிரித் பும்ரா 0 என்று ஆட்டமிழந்தனர்.

இறுதியில், 20 ஓவர்கள் நிறைவில் 152 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது மும்பை இந்தியன்ஸ் அணி.

கொல்கத்தாவின் பந்துவீச்சில் அந்ரே ரஷல் 5 விக்கெட்களை வீழ்த்தினார். பட் கம்மின்ஸ் 2 விக்கெட்களையும், வருண் சக்கரவர்த்தி, சகீப் அல் ஹசன், பிரசித் கிருஷ்ணா ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டை கைப்பற்றினர்.

153 ஓட்டங்கள் என்ற இலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா அணிக்கு நிதிஷ் ராணா, சப்மன் கில் தொடக்கம் கொடுத்தனர். இருவரும் சிறப்பான ஆரம்பத்தை ஏற்படுத்தினர்.

சப்மன் கில் 5 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸரை விளாசி 33 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். ஆனால், அடுத்து வந்த வீரர்கள் எவருமே இரட்டை இலக்க ஓட்டத்தைப் பெறவில்லை.



பொறுமையாக ஆடிய, நிதிஷ் ராணா 6 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 57 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழந்திருந்தார்.

20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்களை இழந்த கொல்கத்தா அணியால் 142 ஓட்டங்களையே பெற முடிந்தது.

இதனால், 10 ஓட்டங்களால் மும்பை இந்தியன்ஸ் அணி வெற்றி பெற்று இரண்டாவது வெற்றியைப் பதிவு செய்தது.

மும்பையின் பந்துவீச்சில் ராகுல் சாகர் 4, ட்ரென்ட் போல்ட் 2 விக்கெட்களைக் கைப்பற்றினர். (ஐ)



இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.04.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதை வழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ் அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை - நேரலை
10.30 மணி : பட்டிமன்றம்
11.30 மணி : COFFE WITH பிரமுகர் - புத்தாண்டு சிறப்பு



**பகல்**
12.30 மணி : சிரிக்கலாம் வாங்க - நேரலை
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர் நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Dance with sayan



6.00 மணி : சித் ஸ்ரீராம் இன்னிசை நிகழ்ச்சி
6.30 மணி : புகழ் மணிமேகலை நகைசுவை நிகழ்ச்சி

**இரவு**
7.00 மணி : சிறப்பு சொற்சமர்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : மட்டக்களப்பு கதிரவன் பாட்டுமன்றத்தின் கவியரங்கம்



## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் சந்தானம் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி - தரம் 06 தமிழ்
6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 கணிதம்
7.30 மணி - தரம் 09 வரலாறு
8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
12.00 மணி - தரம் 06 தமிழ்

**பகல்**
1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
2.00 மணி - தரம் 08 கணிதம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் விவசாயம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்
7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்

## சிவ ஒளி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : யாழ்ப்பாணம் கைதடி வடக்கு கயிற்றசிட்டி கந்தசாமி கோவில்
10.00 மணி : பக்தி பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் காரைநகர் சிவன் கோவில்
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : யாழ்ப்பாணம் கைதடி வடக்கு கயிற்றசிட்டி கந்தசாமி கோவில்

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி - ஆலயப் பாடல்கள்
8.00 மணி - ஜெபமாலை
9.00 மணி - மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி - திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி - குழந்தை யேசு மன்றாட்டு
11.30 மணி - ஜெபமாலை

**பகல்**
12.00 மணி - திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி - மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி - நற்சிந்தனை
3.00 மணி - பாடல்
4.30 மணி - திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
12.00 மணி : லுகர் அதான்

**பகல்**
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
7.00 மணி : பிறை பிரசங்கம்

**இரவு**
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org